# செம்பதாகை

மலர்: 7
இதழ்: 7
ஆடி 1985
விலை ரூபா 2-00
புரட்சிகர வெகுஜன ஏடு

★ இலங்கைத்தமிழர் ஒரு தேசிய இனம் ★ பாரம்பரியமான பிரதேசம் உண்டு. ★ சிறுபான்மையினருக்கு உத்தரவாதம் வேண்டும்.

# 2ம் கட்டப் பேச்சுவார்த்தையில் அரசின் நிலை மாறவேண்டும்!

சந்திப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை என்ற இரு துருவ நிலையில் நின்று வந்த இலங்கை அரசும்—தீவிரவாத இளைஞர்களும் ஒருவரை ஒருவர் சந்தித்து பூட்டானில் தமது முதல் கட்டப் பேச்சுவார்த்தையை நடத்தியுள்ளனர். இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைக்கு நாளும் குறிக்கப் பட்டுள்ளது. இவ் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை ஆக்கபூர்வமான வழிகளில் அமையுமா? என்பதே இன்று எழுந்துள்ள முக்கியமான பிரச்சினையாகும்.

பூட்டான் தலைநகரான திம்புவில் இருதரப்பினரும் சந்தித்தபோது தத்தமது நிலைப்பாட்டை வலியுறுத்தியுள்ளனர். அதே வேளை இரு தரப்பினரும் முன்வைத்த ஆலோசனைகளை பரஸ்பரம் நிராகரித்தும் உள்ளனர். மூன் வைத்த ஆலோசனைகளை மறு பரிசீலனை செய்யுமாறு இரு தரப்பினருமே ஒருவருக்கொருவர் வேண்டுகோளும் விடுத்துள்ளனர்.

இவ்வாறு மறுபரிசீலனை என்ற நிலையில் திம்புவில் இருந்து திரும்பியவர்கள் மீண்டும் சந்திக்கும் போது எந்த அடிப்படையில் பேசப் போகிறார்கள் என்பது முக்கியமானதாகும். இரு தரப்பினரும் தத்தமது நிலைப்பாட்டில் இருந்து விட்டுக்கொடுக்க மறுத்தால் தீர்வு என்பது சாத்தியமற்றதாகி விடும். பிரச்சினை மேலும் சிக்கலடையும். நாடு பெரும் நாசத்தை எதிர் கொள்ள நேரிடும்.

விட்டுக்கொடுப்பு என்று கூறும்போது அரச தரப்பில் இருந்தே அதிகம் செய்யப்பட வேண்டியுள்ளது. இனப் பிரச்சினையை இந்த நிலைக்கு கொண்டுவந்தவர்கள் என்ற காரணத்தால் மட்டுமன்றி, அதிகாரம் கூடிய சுயாட்சியை வழங்க மறுத்து நிற்பவர்களும் அரசு தரப்பினராகவே இருப்பதினாலும், அவர்களே தமது நிலையில் இருந்து விடுபட்டு புதிய யோசனைகளை பயன் உள்ள விதத்தில் முன்வைக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

அரசாங்கம் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையில் புதிய ஆலோசனைகளை முன்வைக்க முன்வந்தால் அவை இலங்கைத் தமிழர்களினதும், ஏனைய தமிழ்பேசும் சிறுபான்மையோரின் அடிப்படை உரிமைகளையும், தனித்துவங்களையும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக அமையவேண்டும்.

இலங்கைத் தமிழர்கள் இந்த நாட்டின் குறிப்பிட்ட நிலப்பரப்பில் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வந்துள்ளனர். இன்று அவர்கள் ஒரு பொது மொழியையும், பொதுப் பொருளாதாரத்தையும், பாரம்பரிய பிரதேசத்தையும், பொதுக் கலாச்சாரத்தையும் கொண்டவர்களாகத் திகழ்கின்றனர். எனவே அவர்கள் இந்த நாட்டின் ஒரு தேசிய இனம் என்பதில் எவ்வித சந்தேகத்திற்கும் இடம் இருக்கமுடியாது.

இந்த உண்மையை இலங்கை அரசு ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும். இதைவிடுத்து இலங்கைத் தமிழர்களை ஒரு தேசிய இனம் அல்ல என்று நிராகரிப்பதோ அல்லது அவர்களது தனித்துவத்தை வரலாற்றுத் திரிபுகளினூடாக மறுப்பதோ அர்த்தமற்ற தொன்றாகும். ஆதலால் இலங்கைத் தமிழர்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரிப்பதும் அவர்களின் பாரம்பரியபிரதேசங்களை ஏற்றுக் கொள்வதும் இனப்பிரச்சினையின் தீர்வுக்கான அடிப்படைகளாகும். அவ்வாறு அங்கீகரிப்பது பிரிவினை என்று அர்த்தமாகிவிடும் என அஞ்சுவது அல்லது நொண்டித்தனமான சாட்டுக்கூறுவது ஏற்றுக்கொள்ளக் கூடிய தொன்றல்ல. ஒரு தேசிய இனத்தை வரலாற்று அம்சங்களுடன் கூடிய தேசிய இனமாக அடையாளம் கண்டு அதன் தனித்துவத்தை அங்கீகரிப்பதற்கும், பிரிவினைக்கு அது வழிவகுத்துவிடும் என்று அஞ்சுவதற்கும் எவ்வித தொடர்பும் இருக்கமுடியாது இதற்கு சோஷலிச சீனம் போன்ற நாடுகள் முன் உதாரணமாகும்.

ஆதலால் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையில்

(6-ம் பக்கம் பார்க்க)

# சிறைகளில் இருக்கும் தமிழ் இளைஞர்களை விடுதலைசெய்!

தமிழ் இளைஞர்கள் பெரும் தொகையில் (ஆயிரத்திற்குமேல் என்றும், இரண்டாயிரத்திற்குமேல் என்றும் கூறப்படுகின்றது. சரியான தொகை விபரம் தெரியவில்லை) நீண்ட நாட்களாகச் சிறைகளில் இருந்து வருகின்றனர். இவர்கள் வடக்கே பலாலியிலிருந்து தெற்கே பூஸா வரையிலான நாட்டின் பல்வேறு சிறைகளில் பலவித சித்திரவதைகளுக்கு மத்தியில் இருக்க விடப்பட்டுள்ளனர். இதுவரை இவர்களில் ஒரு சிலர் மட்டுமே நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டுள்ளனர். ஏனையோர் விசாரணையோ அல்லது குற்றச்சாட்டோ இன்றி தொடர்ந்தும் சிறை இருக்க நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளனர். அண்மையில் நாநூறுக்கு மேற்பட்ட இளைஞர்கள் மீது குற்றம் சாட்ட எதுவித ஆதாரமும் இல்லை என சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்தது. இருந்தும் அவர்கள் அனைவரும் கூட இதுவரை விடுதலை செய்யப் படவில்லை. தமிழ் இளைஞர்களில் பெரும் பகுதியினர் சுற்றிவளைத்து தேடுதல் நடத்திய வேளைகளிலும். வீதிகளிலும், போக்குவரத்திலும் சந்தேகத்தின் மீது கைதுசெய்யப்பட்டவர்களாவர். இவர்கள் மாதக்கணக்கில் வருடக் கணக்கில் சிறைகளில் உள்ளனர். சந்தேகத்தின் மீது பிடித்தாலும் கூட விசாரணையின் மூலம் அவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்க வேண்டும். வருடக்கணக்கில் விசாரணையா? அல்லது பிடிக்கப்பட்ட தமிழ் இளைஞர்கள் பயணக் கைதிகளாக வைத்திருக்கும் நோக்கமா? அடிப்படை மனித உரிமை பேணல், ஜனநாயகம், சட்டத்தின் புனிதத்தன்மை பற்றி எல்லாம் பேசிக்கொண்டு நிரபராதியான பெரும் தொகை இளைஞர்களை அவர்கள் தமிழ் இளைஞர்கள் என்ற காரணத்திற்காக சிறைகளில் அடைத்து நீண்டகாலம் விசாரணை இன்றி வைத்திருப்பது அரச நீதியாகாது. பாசிச சர்வாதிகார நீதி மட்டுமே அதற்கு இடம் கொடுக்கும்.

(6-ம் பக்கம் பார்க்க)

# யுத்த நிறுத்தமா? யுத்த மீறலா?

வடக்கு கிழக்கு மாகாணங்களில் வன்செயல்களை நிறுத்தி வைப்பதற்கான யுத்த நிறுத்த ஏற்பாடு என்பது எவ்வளவிற்கு நேர்மையாகக் கடைப்பிடிக்கப் படுகின்றது என்பது கேள்விக்குரிய ஒன்றாகி வருகின்றது. கடந்த ஒருமாத காலத்தில் பரவலாகப் பல யுத்த மீறல் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றில் பெரும்பாலானவை அரச தரப்பில் இருந்தே மீறப்பட்டுள்ளன. அதே வேளை இனம் தெரியாத இளைஞர் கோஷ்டி என்ற பெயரிலும் சில யுத்த மீறல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

ரோந்து, தேடுதல், கைது, தாக்குதல், ஆட்கடத்தல், கொள்ளை போன்றன யாவும் வன்செயல்களை நிறுத்தும் யுத்தநிறுத்தத்திற்கு உட்பட்டவையேயாகும். ஆனால் இவை தொடர்ந்தும் ஆங்காங்கே இடம்பெறுகின்றன. கிழக்கில் பல சம்பவங்கள் அரச தரப்பில் இருந்து நடைபெற்றுள்ளன. சில நாட்களுக்கு முன்பு கிழக்கின் இருந்து திரும்பிய ஒரு பிரயாணியிடம் விசாரித்த பொழுது யுத்த நிறுத்தம் குடாநாட்டிற்குள் அரச தரப்பில் கடைப்பிடிக்கப்படுவது போல் அங்கு கடைப்பிடிக்கப் படவில்லை என்று கூறினார். கிழக்கில் மட்டுமன்றி வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் ரோந்து, தேடுதல்

(6-ம் பக்கம் பார்க்க)

# பாடசாலைகளை ராணுவ முகாமாக மாற்றுதே!

# இலங்கை ஆசிரியர் சங்க மாநாடு கண்டனம்

இந்த நாட்டின் ஆசிரியர்கள் நம்நாட்டுத் தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள், அடக்கப்படும் தமிழ் மக்கள், மற்றும் அடக்கப்படும் சமூகங்களுடன் இணைந்து இன்றைய அரசாங்கத்தைப் பதவியில் இருந்து அகற்றும் போராட்டத்தில் பங்கு கொள்ள வேண்டும்.

இவ்வாறு அண்மையில் நடைபெற்ற இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வருடாந்த மாநாட்டில் நிறைவேற்றப் பட்ட தீர்மானத்தில் கூறப் பட்டுள்ளது. பல்லாயிரக் கணக்கான சிங்கள தமிழ் முஸ்லீம் ஆசிரியர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட மேற்படி சங்கத்தின் மாநாட்டுத் தீர்மானங்களில் மேலும் பல முக்கிய அம்சங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

1980ம் ஆண்டு யூலை வேலை நிறுத்தத்தில் வேலை இழந்த சகலருக்கும் எவ்வித நியந்தனையோ, தண்டனையோ இன்றி வேலைவழங்குவதுடன் அவர்களுக்கான

(6-ம் பக்கம் பார்க்க)

# பல்கலைக்கழக மாணவர்கள் அரசுக்கு அடி கொடுத்தனர்!

அரசாங்கம் நாட்டுக்கும்—மக்களுக்கும் எதிராகக் கொண்டுவரும் சட்டங்கள், திட்டங்களை விடாப்பிடியாக நிறைவேற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறது. அதற்கு அரசு பாவிக்கும் தந்திரம் என்னவெனில் தான் கொண்டுவரும் சட்டங்களுக்கு மக்கள் மத்தியில் எதிர்ப்புக்கள் தோன்றினால் உடனே அவற்றை பத்திரிகைத்தணிக்கை உள்ளிட்ட அடக்குமுறைகள் மூலம் நசுக்கி சில மாதங்கள் செல்ல நாசுக்காக அவற்றைப் படிப்படியாகப் அமுல் படுத்துவதாகும். அந்தவகையில் பல விடயங்களை அரசு செயல்படுத்தி வந்துள்ளது.

இவ்வாறே சில மாதங்களுக்கு முன்பு புதிய பல்கலைக் கழக சட்டமூலத்தை அரசு கொண்டு வந்தது. மக்கள் குறிப்பாக மாணவர்கள் அச்சட்டமூலத்தை உறுதியாக எதிர்த்தனர். பெரும் ஆர்ப்பாட்டங்களையும், பகிஷ்கரிப்புக்களையும் செய்தனர். பேராதேனியா, கொழும்பு, பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டனர். பத்திரிகைத் தணிக்கை மூலம் மாணவர் போராட்டங்கள் வெளியில் வராது தடுக்கப்பட்டன. பல்கலைக் கழகங்கள் இழுத்து மூடப்பட்டன. இத்தனைக்கும் மாணவர்களாலும் மக்களாலும் எதிர்க்கப்பட்ட பல்கலைக்கழக சட்டமூலம் வாபஸ் வாங்கப்படவில்லை. உயர்வர்க்கத்தின் தேவைக்காக கொண்டுவரப்பட்ட அச்சட்டமூலத்தை யூ. என். பி. வாபஸ் வாங்கமாட்டாது தானே. மாணவர்களின் நியாயமான போராட்டத்தை அரசு பயங்கரவாதமாகக் காட்ட முயன்றது. கிட்டத்தட்ட மாணவர்களின் எதிர்ப்பை அடக்கி விட்டதாகவே அரசு கற்பனை செய்தது.

ஆனால் தமது சக மாணவர்களை உயிர்ப்பலி கொடுத்தும், பலர் படுகாயங்கள் அடையவும் காரணமான பல்கலைச் சட்டத்திற்கு எதிரான கோபாவேசம் மாணவர்களை விட்டுஅகலவே இல்லை அதேவேளை அரசு மாணவர்களின் எதிர்ப்பு அடங்கிவிட்டதாக எண்ணியது. கடந்த 15ம் திகதி மொரட்டுவ பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்ட புதிய கட்டிடத்தை திறக்க மூன்று அமைச்சர்கள் செல்வதற்கு ஏற்பாடாகி இருந்தது. நீதி அமைச்சர் பிரதி உயர்கல்வி அமைச்சர், பிரதி வெளிநாட்டமைச்சர் ஆகியோர் தமது நிகழ்ச்சிப்படி மொரட்டுவ பல்கலைக் கழகத்திற்கு செல்ல முடியாத அளவுக்கு மாணவர்கள் ஆயிரக்கணக்கில் ஒன்று கூடி பெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். பல்கலைக்கழகச் சட்டமூலத்திற்கு எதிராகவும் அரசின் தவறான போக்கைக் கண்டித்தும் மாணவர்கள் சக்தி மிக்க ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். தாங்கள் அங்கே சென்றால் விபரீதம் விளையும் என அஞ்சிய அமைச்சர்கள் தமது நிகழ்ச்சியை ரத்து செய்து விட்டனர். இறுதியில் பல்கலைக்கழக வேந்தரே கட்டிடத்தைத் திறந்து வைத்தார். அன்று முழுநாளும் மாணவர்கள் காட்டிய உறுதியான எதிர்ப்பானது அரசுக்கும் அது கொண்டுவந்த பல்கலைக் கழக சட்டமூலத்திற்கும் பலத்த அடியாகும். மக்களினதும் மாணவர்களினதும் நியாயமான எத்தப்போராட்டத்தையும் எத்தகைய அடக்குமுறையாலும் தோற்கடிக்க முடியாது என்பதை பாசிசத் திமிர் கொண்ட ஆட்சிக்கு பல்கலைக்கழக மாணவர் உணர்த்தி இருப்பது வரவேற்கவேண்டிய ஒரு அம்சமாகும். மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர்களுக்கு சபாஷ் சொல்லவேண்டும். ★

# சம்பவங்களும் அதன் போக்குகளும்

சமனானி

பணம் இங்கு கொலைத்தொழிலுக்குப் பாவிக்கப்படுகிறது. இந்த உண்மை நிலை யாரை உறுத்தாது விட்டாலும் நிச்சயம் நிதி அமைச்சரை உறுத்தியே வருகின்றது. அதனாலேயே அடிக்கடி நீதி அமைச்சர் தனது மறைமுக அதிருப்தியை வெளியிட்டுக் கொள்கிறார்.

மூன்றும் உலகத்தைச் சேர்ந்த ஒரு பின்தங்கிய சிறிய நாடான இலங்கை தனது உள்நாட்டுப் பிரச்சினையை மிகவும் இலகுவாகத் தீர்த்துக் கொண்டு அபிவிருத்திப்பாதையில் முன்னேற முடிந்திருக்கும். சிறு ஊசியால் எடுத்திருக்க வேண்டிய முள்ளை அவ்வாறு செய்யாது இப்பொழுது கோடரி கொண்டு பிளக்க முயல்வது போல் சகல வளங்களையும் இனப்பிரச்சினை சம்பந்தமாக எழுந்துள்ள தீவிரவாதத்திற்கு எதிராகப் பயன் படுத்துவது என்ற நிலையில் சென்றுகொண்டிருக்கின்றது. எத்தனை நாளைக்குத் தான் இவ்வாறு செல்லமுடியும். அதனாலேயே தற்போதைய திம்பு பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தால் நாடு பெரும் நாசத்தை சந்திக்கும் என்று நிதி அமைச்சர் தனது உண்மையான அச்சத்தைத் தெரிவிக்கிறார். அவரது அபாய அறிவிப்பு ஆட்சியின் லக்கான் பிடிக்கும் தலைவர்களின் செவிக்கு ஏறுமாக இருந்தால் அழிவுப் பாதையைக் கைவிட்டு இனப் பிரச்சினையின் நியாயமான தீர்வுக்கு முன்வர முடியும். இல்லாவிடில் நாட்டுமக்கள் மேன்மேலும் பொருளாதார நெருக்கடிகளையும், அச்சங் கொண்டவாழ்வையுமே எதிர் கொள்வர். ★

# விசாரணைகளும் தீர்ப்புகளும்!

தமிழ் மக்கள் மத்தியில் சிவில் நிர்வாகம் இயங்கவில்லை இதனால் மக்கள் மத்தியில் தோன்றும் பிணக்குகள் தீர்க்கப்படுவதில் பெரும் சிக்கல்களும் சிரமங்களும் தோன்றியுள்ளன. சில இடங்களில் அவ்வூர் சனசமூக நிலையங்கள் மற்றும் பொது ஸ்தாபனங்கள் மக்களின் அங்கீகாரத்துடனும், அவர்களின் பலமான ஆதரவுடனும் பாரிய பிணக்குகளைக் கூட தீர்வுக்கு கொண்டு வந்து மக்களிடையே உள்ள முரண்பாடுகளைத் தீர்த்திருப்பதைக் காணமுடிகின்றது. அவ்வாறான தீர்ப்புகள் பெரும்பான்மையான மக்களின் நியாயமான முடிவுகளின் அடிப்படையிலே வழங்கப்பட்டுள்ளன. பிணக்குகள் பற்றிய விசாரணைகளும் பொதுமக்கள் முன்னிலையில் எவ்விதமான பயமுறுத்தல், எச்சரிக்கை, பலாத்காரம் பிரயோகத்தில் இன்றி நடைநடைபெறுவதால் சம்மந்தப்பட்டவர்கள் அத்தீர்ப்புகளை ஏற்றுக்கொள்ளும் நிலையும் தோன்றியுள்ளது. இவை மிகச் சரியான வழிமுறையும் சகல பிரதேச மக்களும் பின்பற்ற வேண்டியதொன்றாகும்.

இதைவிட வேறுவிதமான விசாரணைகளும் தீர்ப்புகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இவை பற்றி தமிழ் மக்கள் மத்தியில் பலமான அதிருப்தியும் எதிப்பும் தோன்றியுள்ளன. ஒருவர் மற்றொருவருக்கு எதிரான முறைப்

(5.ம் பக்கம் பார்க்க)

# இந்திய மாயை விலகிறதா?

சிறிது காலத்திற்கு முன்பு இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியாவின் நிலை பற்றிய அதீத கற்பனைகள் கட்டிவெழுப்பி பரப்பப்பட்டன. இந்தியா வரப்போகிறது என்றும், இந்தியாவை விட்டால் வேறுகதியே தமிழ் மக்களுக்கு இல்லை என்றும் கதைகள் தாராளமாக உலாவின. ஆனால் தற்போது இந்தியாவின் நிலையில் அதிருப்தியும், எதிப்புக்காட்டும் வகையான பிரசாரங்களும் மேற்கொள்ளப் படுகின்றன. நேரடியாகவே இந்திய எதிர்ப்புக் கோஷங்கள் எழுப்பட்ட சந்

யும், இந்திய மக்களை அடக்கி ஒடுக்கி அத்தவறான பொருளாதார அடித்தளத்தைப் பாதுகாத்துவரும் இந்திய ஆளும் வர்க்கத்தினதும் உண்மையான தோற்றத்தைக் கண்டுகொண்டால் நம் நாட்டுத் தமிழ் மக்களின் உண்மையான விடுதலைக்கு இந்தியா எவ்வாறு உதவும் என்பதை லேசாகப் புரிந்து கொள்ள முடியும். அல்லது. சிக்கிம் என்ற சிறிய சுதந்திரநாடு சில வருடங்களுக்கு முன்பு இந்திய மாநிலங்களில் ஒன்றாக மாற்றப்பட்ட சரித்திர சம்பவத்தை விளங்கிக்கொண்டால் இந்தியா பற்றிய கற்

நாட்டு மக்களின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக இங்கு அதிகம் கூறப்படும் ஒரு சோஷலிசத் தமிழ் ஈழம் உருவாக இந்தியா அனுமதிக்குமா என்பது ஆழ்ந்துநோக்க வேண்டியதாகும். ஆதலால் தவறான கணிப்புகளில் இருந்து இந்தியா பற்றிய பிரமைகளை வளர்ப்பது பின்பு அதை எட்டி உதைக்க முற்படுவது போன்ற நிதானமற்ற வழிமுறைகள் தமிழ் மக்களின் விடுதலைக்கு உதவப்போவதில்லை. எதையும் மிகவும் ஆழமாகவும். நிதானமாகவும், எதிர்கால வளர்ச்சிப்

இவ்வாறே சில மாதங்களுக்கு முன்பு புதிய பல்கலைக் கழக சட்டமூலத்தை அரசு கொண்டு வந்தது. மக்கள் குறிப்பாக மாணவர்கள் அச்சட்டமூலத்தை உறுதியாக எதிர்த்தனர். பெரும் ஆர்ப்பாட்டங்களையும், பகிஷ்கரிப்புக்களையும் செய்தனர். பேராதேனியா, கொழும்பு, பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டனர். பத்திரிகைத் தணிக்கை மூலம் மாணவர் போராட்டங்கள் வெளியில் வராது அடையவும் காரணமான பல்கலைச் சட்டத்திற்கு எதிரான கோபாவேசம் மாணவர்களை விட்டுஅகலவே இல்லை அதேவேளை அரசு மாணவர்களின் எதிர்ப்பு அடங்கிவிட்டதாக எண்ணியது. கடந்த 15ம் திகதி மொரட்டுவ பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்ட புதிய கட்டிடத்தை திறக்க மூன்று அமைச்சர்கள் செல்வதற்கு ஏற்பாடாகி இருந்தது. நீதி அமைச்சர் பிரதி உயர்கல்வி அமைச்சர், பிரதி வெளிநாட்டமைச்சர்

கழக சட்டமூலத்திற்கும் பலத்த அடியாகும். மக்களினதும் மாணவர்களினதும் நியாயமான எத்தப்போராட்டத்தையும் எத்தகைய அடக்குமுறையாலும் தோற்கடிக்க முடியாது என்பதை பாசிசத் திமிர் கொண்ட ஆட்சிக்கு பல்கலைக்கழக மாணவர் உணர்த்தி இருப்பது வரவேற்கவேண்டிய ஒரு அம்சமாகும். மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர்களுக்கு சபாஷ் சொல்லவேண்டும். ★

இப்பொழுது கோடரி கொண்டு பிளக்க முயல்வது போல் சகல வளங்களையும் இனப்பிரச்சினை சம்பந்தமாக

மேலே மேலும் பொருளாதார நெருக்கடிகளையும், அச்சங் கொண்டவாழ்வையுமே எதிர் கொள்வர். ★

# விசாரணைகளும் தீர்ப்புகளும்!

தமிழ் மக்கள் மத்தியில் சிவில் நிர்வாகம் இயங்கவில்லை இதனுல் மக்கள் மத்தியில் தோன்றும் பிணக்குகள் தீர்க்கப்படுவதில் பெரும் சிக்கல்களும் சிரமங்களும் தோன்றியுள்ளன. சில இடங்களில் அவ்வூர் சனசமூக நிலையங்கள் மற்றும் பொது ஸ்தாபனங்கள் மக்களின் அங்கீகாரத்துடனும், அவர்களின் பலமான ஆதரவுடனும் பாரிய பிணக்குகளைக் கூட தீர்வுக்கு கொண்டு வந்து மக்களிடையே உள்ள முரண்பாடுகளைத் தீர்த்திருப்பதைக் காணமுடிகின்றது. அவ்வாறான தீர்ப்புகள் பெரும்பான்மையான மக்களின் நியாயமான முடிவுகளின் அடிப்படையிலே வழங்கப்பட்டுள்ளன. பிணக்குகள் பற்றிய விசாரணைகளும் பொதுமக்கள் முன்னிலையில் எவ்விதமான பயமுறுத்தல், எச்சரிக்கை, பலாத்காரம் பிரயோகத்தில் இன்றி நடைநடைபெறுவதால் சம்மந்தப்பட்டவர்கள் அத்தீர்ப்புகளை ஏற்றுக்கொள்ளும் நிலையும் தோன்றியுள்ளது. இவை மிகச் சரியான வழிமுறையும் சகல பிரதேச மக்களும் பின்பற்ற வேண்டியதொன்றாகும்.

இதைவிட வேறுவிதமான விசாரணைகளும் தீர்ப்புகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இவை பற்றி தமிழ் மக்கள் மத்தியில் பலமான அதிருப்தியும் எதிப்பும் தோன்றியுள்ளன. ஒருவர் மற்றொருவருக்கு எதிரான முறைப்

(5.ம் பக்கம் பார்க்க)

# இந்திய மாயை விலகிறதா?

சிறிது காலத்திற்கு முன்பு இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியாவின் நிலை பற்றிய அதீத கற்பனைகள் கட்டியெழுப்பி பரப்பப்பட்டன. இந்தியா வரப்போகிறது என்றும், இந்தியாவை விட்டால் வேறுகதியே தமிழ் மக்களுக்கு இல்லை என்றும் கதைகள் தாராளமாக உலாவின. ஆனால் தற்போது இந்தியாவின் நிலையில் அதிருப்தியும், எதிப்புக்காட்டும் வகையான பிரசாரங்களும் மேற்கொள்ளப் படுகின்றன. நேரடியாகவே இந்திய எதிர்ப்புக் கோஷங்கள் எழுப்பட்ட சந்தர்ப்பங்களும் அண்மையில் நிகழ்ந்தன. இவ்வாறு முன்னுக்குப்பின் முரணான கருத்துக்கள் முன்வைக்கப்படுவது இந்தியா என்ற பெரிய தேசத்தின் எதிர்கால வளர்ச்சியையும், அதன் ஆளும் வர்க்கத்தின் உண்மையான நோக்கங்களையும் தெளிவான முறையில் கண்டுகொள்ளாத காரணத்தினாலேயாகும். இந்தியப் பொருளாதார அடித்தளத்தின் தவறான தன்மையும், இந்திய மக்களை அடக்கி ஒடுக்கி அத்தவறான பொருளாதார அடித்தளத்தைப் பாதுகாத்துவரும் இந்திய ஆளும் வர்க்கத்தினதும் உண்மையான தோற்றத்தைக் கண்டுகொண்டால் நம் நாட்டுத் தமிழ் மக்களின் உண்மையான விடுதலைக்கு இந்தியா எவ்வாறு உதவும் என்பதை லேசாகப் புரிந்து கொள்ள முடியும். அல்லது. சிக்கிம் என்ற சிறிய சுதந்திரநாடு சில வருடங்களுக்கு முன்பு இந்திய மாநிலங்களில் ஒன்றாக மாற்றப்பட்ட சரித்திர சம்பவத்தை விளங்கிக்கொண்டால் இந்தியா பற்றிய கற்பனைகளுக்கு இடம் இல்லாது போயிருக்கும். இந்தியா நமது நாட்டின் அருகில் உள்ள பெரிய தேசம். அங்கு தமிழ் மக்கள் நிறைய வாழ்கிறார்கள். நமது நாட்டின் தமிழ் மக்களின் விடுதலைக்கு இந்தியா எவ்வாறான உதவிகளைச் செய்யமுடியும். இவை தகுந்த சிந்தனைக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும். நாம் இந்தியாவில் அதிக நம்பிக்கை வைப்பதைவிட சொந்த நாட்டு மக்களின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக இங்கு அதிகம் கூறப்படும் ஒரு சோஷலிசத் தமிழ் ஈழம் உருவாக இந்தியா அனுமதிக்குமா என்பது ஆழ்ந்துநோக்க வேண்டியதாகும். ஆதலால் தவறான கணிப்புகளில் இருந்து இந்தியா பற்றிய பிரமைகளை வளர்ப்பது பின்பு அதை எட்டி உதைக்க முற்படுவது போன்ற நிதானமற்ற வழிமுறைகள் தமிழ் மக்களின் விடுதலைக்கு உதவப்போவதில்லை. எதையும் மிகவும் ஆழமாகவும். நிதானமாகவும், எதிர்கால வளர்ச்சிப் போக்கோடும் வைத்து கொள்கை வகுத்து முன்செல்வதே தமிழ் மக்களின் விமோசனத்திற்கு வழி வகுக்கும். சொந்த நாட்டையும், சொந்த மக்களையும், சொந்தமான போராட்டங்களையும் சரியான வழிகளில் முன்னெடுப்பதை அடிப்படையாகக் கொண்டால் இந்தியா பற்றிய குழப்பம் ஏற்பட இடமே இல்லை. ★

# பாதுகாப்புக்கு 15 கோடியாம்!

ஆயுதப்படைகளுக்கு செலவிடப்பட்டு வரும் பணம் அண்மைக் காலங்களில் ஏழு மடங்காக அதிகரித்து விட்டதாகவும், மேலும் பதினைந்து கோடிருபாய் தருமாறு பந்தோபஸ்து அமைச்சர் அத்துலத் முதலி தன்னிடம் கேட்டுள்ளதாகவும் நிதி அமைச்சர் ரொணிடிமெல் தகவல் வெளியிட்டுள்ளார். பந்தோபஸ்து அமைச்சர் கேட்டுள்ள தொகையை பல கஷ்டங்களின் மத்தியிலும் தான் வழங்கப்போவதாகக் கூறியுள்ள நிதி அமைச்சர் பயங்கரவாதப் பிரச்சினை தீர்க்கப்படாது விட்டால் அடுத்த இரண்டு வருடங்களில் நாடு பெரும் கஷ்டத்தை எதிர்கொள்ள வேண்டிவரும் என்றும் கவலை தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புப் படைகளுக்குப் பணம் கேட்பவர் பந்தோபஸ்து அமைச்சர். கொடுத்தே ஆகவேண்டிய நிலையில் இருப்பவர் நிதி அமைச்சர். எனவே எவ்வாறு பணத்தைத் தேடுவது என்பது நிதி அமைச்சருக்கே பிரச்சினை. அவர் அடிக்கடி வெளிநாடுகளுக்குச் சென்று பிச்சை இரப்பது போல் உதவிகேட்டு வருகிறார். கடன், உதவிகள் கோரும் போது அவரை நோக்கிப் பல கேள்விகள் எழுகின்றன. இருந்த போதிலும் மேற்கு நாடுகள் இந்த அரசாங்கத்தை நிலைநிறுத்தி வைப்பதற்காக கடன்கொடுத்து வருகின்றன. அபிவிருத்திக்கென்று வாங்கிவரப்படும்

## விடுதலையும் கட்டுப்பாடும்

மக்களின் உண்மையான விடுதலைக்குப் போராடும் விடுதலைப் படைகளாயின் அதற்கு கட்டுப்பாடும் ஒழுக்கமும் மிக மிக அவசியமாகும். எது செய்யவேண்டும் எது செய்யக்கூடாது என்பதில் தெளிவு இருக்கவேண்டும். அதனாலேயே சீனப்புரட்சியின் போது தோழர் மாசேதுங் அவர்கள் சீன மக்கள் விடுதலைச் சேனைக்கு கீழ்வரும் கட்டுப்பாடுகளை மிக உறுதியாகக் கடைப்பிடிக்கும் படி வலியுறுத்தினர். அவையாவன:

### கட்டுப்பாடுபற்றிய 3 பிரதான விதிகள்

1. நடவடிக்கைகள் எல்லாவற்றிலும் கட்டளைக்குக் கீழ்ப்படி.
2. மக்களிடமிருந்து ஒரு ஊசியையோ அல்லது ஒரு துண்டு நூலையோ எடுக்காதே.
3. கைப்பற்றிய எல்லாவற்றையும் ஒப்படை.

### கவனத்திற்கான 8 அம்சங்கள்

1. மரியாதையாகப்பேசு.
2. வாங்குவதிலும் விற்பதிலும் நியாயமாக நடந்துகொள்.
3. கடன் வாங்கியவற்றைத் திருப்பிக் கொடு.
4. சேதங்களுக்கு நஷ்ட ஈடு செலுத்து.
5. மக்களை அடிக்கவோ நிந்திக்கவோ கூடாது.
6. பயிர்களை அழிக்காதே.
7. பெண்களிடம் ஒழுங்கீனமாக நடவாதே.
8. கைதிகளைத் துன்புறுத்தாதே.

# தமிழ் மக்களின் அபிலாஷைகள் அதிகாரப் பரவலாக்கலின் மூலம் நிறைவுபெறுமா?

இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளின் தீர்வுக்கு பல்வேறு ஆலோசனைகள் உள்நாட்டிலும் வெளிநாடுகளில் இருந்தும் முன்வைக்கப்படுகின்றன. இவற்றில் பிரதேச சுயாட்சி, மாநில சுயாட்சி, சமஷ்டிமுறை, பிரதேசசபை, மாகாண சபை போன்றன குறிப்பானவையாகும். எவ்வளவிற்கு பயன் உள்ள ஆலோசனைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் அரசு அவற்றிற்கு செவி சாய்ப்பதாகக் காணவில்லை. அதற்குப் பதிலாகத் தானே வகுத்துக் கொண்ட மாவட்ட சபை அமைப்பு என்ற வெறும் பெயரளவிலான ஒன்றை வைத்துக்கொண்டு அதன் மூலம் அதிகாரப் பரவலாக்கல் என்ற ஒரு சொற்றொடரை மிகவும் கவனமாகப் பாவித்து வருகிறது,

முன்பும் பல தடவைகள் முன்வைக்கப்பட்டதும், பூட்டான் முதல் கட்டப் பேச்சுவார்த்தையில் முன் வைக்கப்பட்டதுமான அதிகாரப் பரவலாக்கல் என்ற அரசின் இக்கொள்கையால் தமிழ்பேசும் மக்கள் தமது மறுக்கப்பட்ட உரிமைகளையும், உள்ளார்ந்த அபிலாஷைகளையும் பெற்றுக் கொள்ள முடியுமா என்பதே முக்கியமானதாகும்.

இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் இலங்கைத் தமிழர், இலங்கை முஸ்லீம்கள், இந்திய வம்சாவழியினர் என்ற மூன்று முக்கிய பிரிவினரையும், இலங்கைத் தமிழர்களுக்குள் அடங்கும் தாழ்த்தப்பட்டவர்கள் அழைக்கப்படுபவர்களை உப பிரிவாகவும் கொண்ட அடிப்படையில் அமைகின்றனர். யதார்த்த ரீதியில் இவ்வாறு அமையும் தமிழ்பேசும் மக்கள் வடக்கு, கிழக்கு, மலையகம், இவை தவிர்ந்த இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் வாழ்ந்து வருகிறார்கள் என்பதும் நடைமுறை உண்மையானதாகும்.

இவ்வாருக வாழ்ந்து வரும் தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளையும், அவர்களுக்கு மறுக்கப்பட்டுவரும் உரிமைகளையும், அவர்கள் படிப்படியாக இரண்டாம் தர நிலைக்கு தள்ளப்பட்டு வந்த நிலைமைகளையும் இரண்டு அடிப்படைத் தன்மைகளுக்குள் உள்ளடக்கலாம். ஒன்று இன அடிப்படைகளைக் கொண்டது. இரண்டாவது வர்க்க அடிப்படைகளைக் கொண்டது. இரண்டாவதாகக் கூறப்பட்ட வர்க்க அடிப்படைகளைக் கொண்ட பிரச்சினைகள் நாட்டின் முழுமையான பிரச்சினைகளோடும் முழு மக்களோடும் இழையோடியுள்ள தொன்று இருந்த போதிலும் அவற்றில் கூட சில இன முத்திரைகள் பதிந்துள்ளதை மறுக்கமுடியாது. இத்தகைய வர்க்கரீதியான தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகள் முழுமையாக வென்றெடுக்கப்படுவதற்கு ஒரு நீண்டகாலப் போராட்டம் முழுமையான தேச விடுதலையுடன் ஒன்றிணைந்த அடிப்படையில் முன்னெடுக்கப்படவேண்டும்.

ஆனல் இன்று முதன்மைப் படுத்தப்படுவது இன அடிப்படையிலான அபிலாஷைகளை வென்றெடுக்க தமிழ் பேசும் மக்கள் சார்பாகப் போராடுவது பற்றியதேயாகும். பேரினவாத ஆளும்சக்திகளின் திட்டமிட்ட தொடர்ச்சியான செயல்பாடுகள், வர்க்கரீதியான ஐக்கியத்தினுைம், தேசம் தழுவிய முழுமையான போராட்டத்தாலும் வென்றெடுக்கவேண்டிய இன அடிப்படையிலான அபிலாஷைகளை மோசமாகச் சிதறடித்து தனியே இனரீதியான இயக்கங்களுக்கும் போராட்டங்களுக்கும் வழிவகுத்து விட்டது. இலங்கையின் அரசியல் வரலாற்றில் இவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட இன அடிப்படையிலான பிரச்சினைகளையும் அதன் பாற்பட்ட தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளையும் வெறும் வரட்டு வேதாந்தத்தின் மூலம் தட்டிக்கழிக்கவோ அல்லது நிராகரிக்கவோ முடியாது. அதேவேளை மறுமுனைக்குச் சென்று அதிதீவிர தமிழ் இனப் பிரிவினை வாதத்திற்கு உதவவும் முடியாது. இரு அந்தலைகளுக்கும் செல்லாது நிதானமான முறையில் தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுக்க சரியானதோர் போராட்டக் கொள்கையையும், பாதையும் உருவாக்குவது காலத்தின் தேவையாகும்.

இது நிற்க. தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளும் அபிலாஷைகளும் எவை என்பது நோக்கப்பட வேண்டியதாகும். அவர்களது மொழிக்கு உள்ள அந்தஸ்தும் அம்மொழியின் பிரயோகத்திற்கான வாய்ப்புகளும், கல்விக்கான தடங்கல்களும், உயர் கல்விக்கான வாய்ப்பை இன அடிப்படையில் தடுக்கப்படுவதும், வேலைவாய்ப்பில் திட்டமிட்ட குறைப்பும், பதவி உயர்வில் வழமையான ஜனநாயக முறைகள் கைவிடப்பட்டு இனரீதியில் ஒதுக்கப்படுவது போன்றவற்றைக் குறிப்பாகக் கூறலாம். தமிழ்ப் பிரதேசங்களின் பொருளாதார வளர்ச்சி முற்றுகவே புறக்கணிக்கப்படுவது, பல

**வெகுஜனன்**

தடைகள், இன்னல்களுக்கு மத்தியில் கடும் முயற்சிகளின் மூலம் உற்பத்தி செய்யப்படும் விவசாய உற்பத்திகளை திட்டமிட்டே மட்டம் தட்டி வருவது, கலாச்சார வளர்ச்சி சுகாதாரத்தைப் பேணி விருத்தி செய்தல் போன்ற பல முனைகளிலும் தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் புறக்கணிக்கப்பட்டு, மறுக்கப்பட்டு, பாராமுகமாகவிடப்பட்டு வந்த ஒரு தொடர் போக்கைக் காணமுடியும்.

இவற்றைவிட மிக மிக முக்கியமானதொன்ருகத் திகழ்வது தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களை தொடர்ந்தும் அவ்வாறு இருக்க அனுமதிக்காது திட்டமிட்ட சிங்கள மக்களைக் கொண்ட குடியேற்றங்களை உருவாக்கியுள்ளமையும் அதை மேலும் முன்னெடுக்க முயலுவதாகும். இந்தமுயற்சி சுதந்திரம் என்பதற்குப் பின் மிகவும் துரிதமாக அதிகார பீடத்தில் இருந்துவந்த பேரினவாதிகளால் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன. கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகள், வடக்கு மாகாணத்தின் வன்னிப்பகுதிகள் திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்திற்கு உள்ளாகிவிட்டன. இந்த நடைமுறையை விஸ்தரிக்க மேலும் முயற்சிகள் இடம்பெறுகின்றன.

மேற்கூறிய விடயங்களை உள்ளடக்கிய பிரச்சினைகள் தமிழ் பேசும் மக்கள் என்று அழைக்கப்படும் சகல பிரிவினருக்கும் பொதுவானவையாக காணப்படுகின்றன. அதே வேளை கிழக்கிலும் ஏனைய மாகாணங்களில் வாழும் முஸ்லீம் மக்களினதும், மலையகத்திலும் ஏனைய பிரதேசங்களில் வாழும் இந்திய வம்சாவழி மக்களினதும் தனித்துவமான பிரச்சினைகள் என்று அடையாளம் காணப்பட்டவைகள் இருக்கின்றன. அப்பிரச்சினைகளும் அவற்றுக்கான மக்களின் அபிலாஷைகளும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளோடு பின்னிப்பிணைந்தவையாகும். அதே போல் தாழ்த்தப்பட்ட மக்களின் பின்தங்கிய நிலையும் அவர்கள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருவதும் தமிழர் பிரச்சினையோடு சம்மந்தமுடையதாகும்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை அரசு மிகவும் குறுகிய கண்ணுடிவாயிலாகப் பார்த்து அதற்குப் பரிகாரமாக அதி

(5-ம் பக்கம் பார்க்க)

# பேச்சுவார்த்தை!

தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் பேச்சுவார்த்தை என்பது புதிய ஒரு விடயமல்ல. இப்பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் உருவாகிய ஒப்பந்தங்கள் எதுவும் நடைமுறை வெற்றிகளை ஏற்படுத்தவில்லை. இவ்வாறு கடந்தகாலப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் மீண்டும் பயனற்றுப் போனமைக்

தான் தங்கி இருக்கிறது என்ற ஒரு வித மயக்கத்தை ஏற்படுத்துவதாகவும் யாரும் கருதக்கூடாது.

கோ அல்லது அப்பேச்சு வார்த்தைகள் தோல்விகண்ட மறுகணம் உறுதியான போராட்டங்களை முன்னெ

என்பதையும் சரியான விதத்தில் புரிந்துகொண்டால் அவர்கள் எத்தகைய வலை விரிக்காலும்

ஆகியவற்றை மக்கள் சார்பாக முன்னெடுக்கும் போது பேச்சுவார்த்தை என்பது தவிர்க்கமுடியாத ஒன்ருகிவிடுகிறது. அது வெற்றி பெருது போகலாம். மீண்டும் மீண்டும் கூட வெற்றிபெருது போகலாம். அது மக்களின் நியாயமான அபிலாஷைகளை மறுத்து தோல்வி

திற்கு செவி சாய்ப்பதாகக் காணவில்லை. அதற்குப் பதிலாகத் தானே வகுத்துக்கொண்ட மாவட்ட சபை அமைப்பு என்ற வெறும் பெயரளவிலான ஒன்றை வைத்துக்கொண்டு அதன் மூலம் அதிகாரப் பரவலாக்கல் என்ற ஒரு சொற்றொடரை மிகவும் கவனமாகப் பாவித்து வருகிறது,

முன்பும் பல தடவைகள் முன்வைக்கப்பட்டதும், பூட்டான் முதல் கட்டப் பேச்சுவார்த்தையில் முன் வைக்கப்பட்டதுமான அதிகாரப் பரவலாக்கல் என்ற அரசின் இக்கொள்கையால் தமிழ்பேசும் மக்கள் தமது மறுக்கப்பட்ட உரிமைகளையும், உள்ளார்ந்த அபிலாஷைகளையும் பெற்றுக்கொள்ள முடியுமா என்பதே முக்கியமானதாகும்.

இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் இலங்கைத்

முறை உண்மையானதாகும்.

இவ்வாறாக வாழ்ந்து வரும் தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளையும், அவர்களுக்கு மறுக்கப்பட்டுவரும் உரிமைகளையும், அவர்கள் படிப்படியாக இரண்டாம் தர நிலைக்கு தள்ளப்பட்டு வந்த நிலைமைகளையும் இரண்டு அடிப்படைத் தன்மைகளுக்குள் உள்ளடக்கலாம். ஒன்று இன அடிப்படைகளைக் கொண்டது. இரண்டாவது வர்க்க அடிப்படைகளைக் கொண்டது. இரண்டாவதாகக் கூறப்பட்ட வர்க்க அடிப்படைகளைக் கொண்ட பிரச்சினைகள் நாட்டின் முழுமையான பிரச்சினைகளோடும் முழு மக்களோடும் இழையோடியுள்ள தொன்று இருந்த போதிலும் அவற்றில் கூட சில இன முத்திரைகள் பதிந்துள்ளதை மறுக்கமுடியாது. இத்தகைய வர்க்கரீதியான தமிழ் பேசும் மக்களின்

இன அடிப்படையிலான அபிலாஷைகளை மோசமாகச் சிதறடித்து தனியே இனரீதியான இயக்கங்களுக்கும் போராட்டங்களுக்கும் வழி வகுத்து விட்டது. இலங்கையின் அரசியல் வரலாற்றில் இவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட இன அடிப்படையிலான பிரச்சினைகளையும் அதன் பாற்பட்ட தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளையும் வெறும் வரட்டு வேதாந்தத்தின் மூலம் தட்டிக்கழிக்கவோ அல்லது நிராகரிக்கவோ முடியாது. அதேவேளை மறுமுனைக்குச் சென்று அதிதீவிர தமிழ் இனப் பிரிவினை வாதத்திற்கு உதவவும் முடியாது. இரு அந்தலைகளுக்கும் செல்லாது நிதானமான முறையில் தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுக்க சரியானதோர் போராட்டக் கொள்கையையும், பாதையும் உருவாக்குவது காலத்தின் தேவையாகும்.

புறக்கணிக்கப்படுவது, பல சாவழி மக்களினதும் தனித்

## வெகுஜனன்

தடைகள், இன்னல்களுக்கு மத்தியில் கடும் முயற்சிகளின் மூலம் உற்பத்தி செய்யப்படும் விவசாய உற்பத்திகளை திட்டமிட்டே மட்டம் தட்டி வருவது, கலாச்சார வளர்ச்சி சுகாதாரத்தைப் பேணி விருத்தி செய்தல் போன்ற பல முனைகளிலும் தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் புறக்கணிக்கப்பட்டு, மறுக்கப்பட்டு, பாராமுகமாகவிடப்பட்டு வந்த ஒரு தொடர் போக்கைக் காணமுடியும்.

இவற்றைவிட மிக மிக முக்கியமானதொன்றாகத் திகழ்வது தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களை தொடர்ந்தும் அவ்வாறு

துவமான பிரச்சினைகள் என்று அடையாளம் காணப்பட்டவைகள் இருக்கின்றன. அப்பிரச்சினைகளும் அவற்றுக்கான மக்களின் அபிலாஷைகளும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளோடு பின்னிப் பிணைந்தவையாகும். அதேபோல் தாழ்த்தப்பட்ட மக்களின் பின்தங்கிய நிலையும் அவர்கள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருவதும் தமிழர் பிரச்சினையோடு சம்மந்தமுடையதாகும்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை அரசு மிகவும் குறுகிய கண்ணோடிவாயிலாகப் பார்த்து அதற்குப் பரிகாரமாக அதி

(5-ம் பக்கம் பார்க்க)

# பேச்சுவார்த்தை!

தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் பேச்சுவார்த்தை என்பது புதிய ஒரு விடயமல்ல. இப்பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் உருவாகிய ஒப்பந்தங்கள் எதுவும் நடைமுறை வெற்றிகளை ஏற்படுத்தவில்லை. இவ்வாறு கடந்தகாலப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் மீண்டும் பயனற்றுப் போனமைக்குப் பல பக்கக் காரணங்கள் உண்டு. முதலாளித்துவப் பாராளுமன்ற சந்தர்ப்பவாதம், பேரினவாத உள்நோக்கங்கள், தமிழ்த் தலைவர்களின் உயர்வர்க்க நிலைப்பாடும் அவர்கள் நடத்திய பலவீனமான இயக்கங்கள் போன்றவற்றைக் கூறமுடியும்.

கடந்த காலத்தில் தமிழ் மக்கள் பேச்சுவார்த்தை என்ற விடயத்தில் கசப்பான அநுபவங்களைப் பெற்ற காரணத்தால் இன்று பேச்சுவார்த்தையே வேண்டாம் என்று கூற முற்படுவது நியாயமானதொன்றல்ல. அன்றைய பேச்சுவார்த்தைக்கும் இன்றைய பேச்சுவார்த்தைக்கும் இடையில் உள்ள அடிப்படைத் தன்மைகளையும், பேச்சுவார்த்தையில் பங்கு கொள்ளும் சக்திகளையும், இன்றைய தேசிய சர்வதேசிய நிலைமைகளையும் கணக்கில் கொள்ளாது பேச்சுவார்த்தைகள் வேண்டாமென மொட்டையாகக் கூறமுடியாது. இவ்வாறு கூறுவது முற்று முழுதான வெற்றி தற்போதைய பேச்சுவார்த்தையில் தான் தங்கி இருக்கிறது என்ற ஒரு வித மயக்கத்தை ஏற்படுத்துவதாகவும் யாரும் கருதக்கூடாது.

அதாவது ஒரு போராட்டத்திற்கும் அப் போராட்டத்தின் அடிப்படையில் உருவாகும் பேச்சுவார்த்தைக்கும் இடையிலான உறவைச் சரியாகப் புரிந்து கொள்வது தொலை நோக்க அரசியல் நிலைப்பாட்டிற்கு அவசியமாகும். அந்த அடிப்படையில் தான் தற்போதைய பேச்சுவார்த்தையை தமிழ்மக்கள் பார்க்கவேண்டும். 'கலகம் பிறந்தால்தான் நியாயம் பிறக்கும்' என்பது ஒரு தமிழ் முதுமொழி. இந்த அர்த்தத்தில் கலகம் போராட்டமாகவும், நியாயம்பேச்சுவார்த்தையாகவும் இருக்கமுடியும். முன்பெல்லாம் பேச்சுவார்த்தைகள் தோல்வி கண்டமைக்கு தமிழ்த்தலைவர்களின் உயர்வர்க்க நிலைப்பாடு ஒரு காரணம் என்பது யாராலும் மறுக்கமுடியாது. அவர்கள் சிங்கள ஆளும் வர்க்கத்தோடு ஒரு வகையான சமரசப் பேரம் பேசுவதையே பேச்சுவார்த்தையாக்கினார்களே தவிர தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷைகளை விட்டுக் கொடுக்காது பேசுவதற்கோ அல்லது அப்பேச்சுவார்த்தைகள் தோல்விகண்ட மறுகணம் உறுதியான போராட்டங்களை முன்னெடுப்பதற்கோ தமிழ் தலைவர்கள் முன்வரவில்லை. அத்தோல்விகளை உணர்ச்சி மிக்கப் பேச்சுக்களாக மாற்றி இனவாதத்தை வளர்த்து தமது பாராளுமன்ற ஆசனங்களைப் பெருக்கி தங்களின் உயர்வர்க்க நிலைகளைப் பேணிக்கொண்ட நிலைமைகளையே காணமுடிந்தது.

ஆனால் இன்றைய நிலைமை முற்றிலும் வேறாகவே உள்ளது. புதிய சூழ்நிலைகளில் பேச்சுவார்த்தையில் பங்கு பற்றும் சக்திகள் பழைய உயர்வர்க்கத் தலைமை விட்ட தவறான அனுபவங்களில் இருந்து தமிழ்மக்களின் அடிப்படையான அபிலாஷைகளை விட்டுக்கொடுக்காத உறுதியான நிலையில் இருக்குமானால் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வது தவறாக இருக்க முடியாது. எனவே பேச்சுவார்த்தை வேண்டாம் என்ற கோஷம் எழுப்பவும் தேவை ஏற்படாது. பேச்சுவார்த்தையின் எதிர்ப்பக்கத்தில் இருப்பவர்கள் மக்களின் எதிரிகள் தான் என்பதையும் அவர்களின் உள்நோக்கம் எவை என்பதையும் சரியான விதத்தில் புரிந்துகொண்டால் அவர்கள் எத்தகைய வலை விரித்தாலும் அதில் சிக்க வேண்டிய சந்தர்ப்பம் உருவாகவேண்டிய அவசியமே ஏளப்போவதில்லை.

உலகில் இடம்பெற்ற வரலாற்றுப்புகழ் மிக்கப் புரட்சிகள், போராட்டங்கள் அனைத்திலும் பேச்சுவார்த்தை என்பது ஒரு பிரதான அம்சமாக இருந்தே வந்திருக்கிறது. இறுதி வெற்றிக்கும், இடைக்காலத் தீர்வுக்கும் எதிரியைத் தோற்கடிக்கும் தந்திரோபாயத்திற்கும் பேச்சுவார்த்தை ஒரு வித ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டே வந்திருக்கிறது. ஆதலால் அரசியல் மார்க்கத்திற்கும் விடுதலைக்கும் உள்ள உறவைச் சரியான முறையில் வரையறுத்துக் கொள்ளும் எவருக்கும் பேச்சுவார்த்தையைப் பயன் படுத்துவதில் மயக்கம் எதுவும் ஏற்பட இடமில்லை. 'யுத்தம் இரத்தம் சிந்தும் அரசியல், அரசியல் இரத்தம் சிந்தாத யுத்தம்' என்ற மாஓ அவர்களின் கூற்று போராட்டத்திற்கும் அரசியலுக்கும் உள்ள தொடர்பை துல்லியமாக்குகின்றது. அரசியல் மார்க்கம், போராட்ட தந்திரோபாயம் ஆகியவற்றை மக்கள் சார்பாக முன்னெடுக்கும் போது பேச்சுவார்த்தை என்பது தவிர்க்கமுடியாத ஒன்றாகி விடுகிறது. அது வெற்றி பெறாது போகலாம். மீண்டும் மீண்டும் கூட வெற்றிபெறாது போகலாம். அது மக்களின் நியாயமான அபிலாஷைகளை மறுத்து தோல்வி அடையும் ஒவ்வொரு சந்தர்ப்பமும் எதிரிக்குப் பலவீனத்தையும் மக்களுக்குப் பலத்தையுமே அளிக்கும். எதிரி சகல வழிகளிலும் அம்பலப்படுவதற்கு பேச்சுவார்த்தை என்ற களத்தைப் போராடும் சக்திகள் சரியான வழிகளில் பயன்படுத்தினல் அதுவும் மக்கள் வெற்றிக்கு ஒரு உறுதுணையான அம்சமேயாகும்.

எனவே அதி தீவிர ஒரு முனைவாத நிலையில் இருந்து அர்த்தமற்ற கோஷமாகப் பேச்சுவார்த்தை வேண்டாம் எனக் கூறி எதிரிக்கு பலத்தைச் சேர்ப்பதைவிட, பேச்சுவார்த்தையையும் பயன்படுத்த வேண்டும், பேச்சுவார்த்தையில் சரியான நிலைப்பாட்டை வகிக்கவேண்டும் என்ற நிலையே சரியானதும், தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு உதவக்கூடியதுமாகும்.

# முதலாளித்துவம் என்ருல் என்ன?

## ஒரு கேள்வியும் பதிலும்

★ ★ ★ அவதானி

முதலாளித்துவம் பற்றி நம்முள் சில தெளிவீனங்கள் உள்ளன. இவற்றுட்சில முதலாளித்துவம் நம் சமூதாய அமைப்பிற்குள் புகுந்த சூழலாலும் விருத்தியடைந்த போக்கின் சிக்கல்களாலும் உருவானவை. வேறு சில, மாக்ஸியத்தை எதிர்ப்போராலும் மாக்ஸியத்தின்பேரில் பிற்போக்குவாத அரசியல் நடத்தும் சிலராலும் உருவாக்கப்பட்டவை. சோஷலிசம் என்கிற சொல்லை யூ. என். பியும் நேரு பரம்பரையும்கூடக் கூசாமல் தங்களை வர்ணிக்கப் பயன்படுத்தும் இன்றைய சூழலில் இவ்வாருன குழப்பங்கள் நமக்கு அதிசயம் தருவன அல்ல.

முதலாளித்துவம் என்பது ஒரு சமுதாய உற்பத்தி உறவு சார்ந்தது. அந்த உற்பத்தி உறவுள்ள சமுதாய அமைப்பு முதலாளித்துவ சமூதாய அமைப்பு. அதன் மூலம் நன்மைபெறும் சமூதாயப்பிரிவினரின் நலன் பேணவும் அந்த அமைப்பை நிலை நிறுத்தவும் நீடிக்கவும் முனையும் அரசு முதலாளித்துவ அரசு. முதலாளித்துவ அரசுக்கு உடன்பாடாக நடக்கக் கூடிய அரசியல் முதலாளித்துவ அரசியல்.

முதலில் முதலாளித்துவத்தின் அடிப்படையான உற்பத்தி உறவைக் கவனிப்போம். முதலாளித்துவம் நவீன உற்பத்தி முறையின் வருகையை ஒட்டி உருவான ஒன்று. பண்டங்களை உற்பத்தி செய்யவும் விநியோகிக்கவுமான சாதனங்களைத் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுள்ள ஒரு சமுதாயப்பிரிவினர் அந்தப் பண்டங்களை உற்பத்தி செய்யும் மனிதர்களது உழைப்பை, இன்னும் சரியாகச் சொன்ஞல் உழைப்புச் சக்தியை, வாங்குகிருர்கள். அதன் மூலம் உருவாகும் பண்டங்களுடைய பெறுமதியில் உழைப்பின் மூலம் வழங்கப்பெற்றதில் ஒரு பகுதி தொழிலாளிக்குக் கூலியாக

இவ்வாருன முதலாளித்துவமுறை மனிதனுடைய உழைப்பை மனிதன் சுரண்டும் அடிப்படையில் அமைந்துள்ளதால் சுரண்டுபவர்களுக்கும் சுரண்டப்படுபவனுக்கும் இடையிலான பகைமை அங்கு இயல்பாகவே வந்து பொருந்துகிறது. சுரண்டுவோர் ஒரு சமூதாயப் பிரிவினராயும் (வர்க்கம்) சுரண்டப்படுவோர் இன்னெரு சமுதாயப் பிரிவினராயும் அமையும் ஒரு நிலையில் இந்தப் பிரிவினருக்கு இடையே உள்ள பகை தனி மனிதப் பகைமையாக இல்லாமல் ஒரு வர்க்கப் பகைமையாகி வீடுகிறது.

முதலாளித்துவத்தின் வளர்ச்சி இலாப வேட்கையை அடிப்படையாகக் கொண்டது. எனவே, சமுதாயத்தில் உள்ள நடுத்தர வர்க்கங்களான சில்லறை வியாபாரிகள், சிறு உற்பத்தியாளர்கள் போன்ருேரை முதலாளிகள் விட்டுவைப்பதில்லை. எனவே இவர்களில் ஒரு சிலர் புதிய முதலாளிகளாகிருர்கள். பிறரின் நிலையோ, உழைப்பை விற்கும் நிர்ப்பந்தத்தை நோக்கித் தள்ளப்படுகிறது. இதன் மூலம் வர்க்கங்களிடையிலான வேற்றுமையும் பகைமையும் கூர்மை யடைகின்றன.

முதலாளித்துவம் ஒரு தொழிலாளியிடம் இருந்து வேண்டுவது அதிகளவு உற்பத்தி. எனவே அவனுக்குத் தொழிற்பயிற்சி அளிப்பது அவசியமாகிறது அதற்குக் கல்வி அவசியமாகிறது. ஆனல் கல்வி அறிவு தொழிலாளிக்குத் தொழிலைக் கற்பிப்பதோடு நின்றுவிடுவதில்லை. தன் சூழலையும் சமுதாய நிலையையும் ஆராய்வதற்கும் அறிவதற்கும் அது தொழிலாளிக்கு வாய்ப்பை ஏற்படுத்துகிறது. எனவே தொழிலாளி வர்க்கம் ஒன்றுபடவும் போராடவும் மேலும் சாத்தியமாகிறது.

முதலாளித்துவம் கட்டவிழ்த்துவிட்ட உற்பத்திச் சக்

என்பதால் முதலாளித்துவம் பேசாமல் இருந்துவிடுவதில்லை அது தன் எதிரிகளை நன்ருகவே அடையாளங் கண்டு கொள்கிறது. முதலாளித்துவம் தன் தோற்றத்தின் போது பழைய சமூதாய அமைப்பை (அதாவது நிலமான்ய முறையை) முறியடிக்கும் அவசியத்திற்கு உள்ளாகியது. நிலப்பிரபுக்களின் பிடிப்பிலிருந்து பண்ணையடிமைகளை விடுவிக்கும் தேவை அதற்கு இருந்தது. நிலப்பிரபுக்களுக்கு ஆதாரமாக நின்ற மத அதிகாரபீடங்களையும் நிலப்பிரபுத்துவத்தின் ஊன்றுகோலாக நின்ற உழுத்துப்போன சிந்தனைகளையும், சமுதாய மரபுகளையும் எதிர்க்கும் தேவை அதற்கு இருந்தது. எனவே ஒரு வகையில் அது ஒரு விடுதலைச் சக்தியாகச் செயற்பட்டது. ஆனல் நில மான்ய முறை முறியடிக்கப்பட்டு முதலாளித்துவம் நிலைநிறுத்தப்பட்ட பின்பு, முதலாளித்துவ சமுதாயத்தின் அழிவுக்கு அது உருவாக்கிய தொழிலாளி வர்க்கமே காரணமாகும் என்பதை முதலாளித்துவம் உணர நபளாக வில்லை. எனவே தொழிலாளி வர்க்கத்தை அடக்கவும், பிளவுபடுத்தவும் மயக்கவும் வெவ்வேறு தந்திரங்களை உபயோகிக்கவும் அது முற்பட்டது.

தொழிலாளர்களின் போராட்டங்களை எதிர்க்க ஆதியில் தொழிற்சங்க எதிர்ப்புச் சட்டங்கள் போன்றன மூலம் அரசாங்கம், காவல் துறை, நீதித்துறை ஆகியன பயன்பட்டன. பின்பு அப்போராட்டங்கள் தொடர்ந்தால் சமுதாய அமைப்பே சீர் குலையும் என்று தெளிவானதால் சீர்திருந்தங்கள் மூலம் தொழிலாளர்களது போராட்டவேகம் தளர்த்தப்பட்டது. பின்பு முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாக வளர்ச்சி பெற்றதன் மூலம் சுரண்டலின் சுமையின் பெரும் பகுதி தேசிய எல்லைகட்கு வெளியே தள்ளப்பட்டது. இதனல் வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாட்

ளர்கள் போராடாமல் மறிக்குமாறு ஒரு மிரட்டல் முறையையும் முதலாளித்துவம் கையாள்கிறது. ஆயினும், இதுவே வேறு புதிய சமூதாய நெருக்கடிகட்குக் காரணமாகி விடுகிறது.

சமுதாயத்தில் ஏற்படும் வர்க்கமோதல் உக்கிரமடைந்தால் அது முதலாளித்துவத்தின் அழிவுக்கும் முதலாளி வர்க்கம் நிர்மூலமாவதற்குமே வழி கோலும் என்பதால் முதலாளித்துவம் தன் பாதுகாப்புக்குப் பூரணமாக அடக்குமுறையையே சார்ந்து இருப்பதில்லை. தொழிலாளி வர்க்கத்தைக் குறைந்த விலையில் திருப்திப்படுத்த முடியுமானல் அதையும் முதலாளித்துவம் தவிர்ப்பதில்லை. எனவே தொழிலாளர் போராட்டங்கள் அடிப்படையான சமுதாய மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு முன்னமே முதலாளித்துவம் சமரசத்துக்கு ஆயத்தமாகிவிடுகிறது. அதன் விளைவாகவே பல்வேறு சமூக சீர்திருத்தங்களும் மேற்கொள்ளப்படுகின்றன. ஜனநாயக உரிமைகள், சமூதாய நலன் பேணும் ஸ்தாபனங்கள் போன்றவை தொழிலாளி வர்க்கத்திற்கு வரையறைக்குட்பட்ட உரிமைகளையும் நலன்களையும் வழங்குவதால் போராட்டத்திற்கான தேவையும்போராட்ட உணர்வும் ஓரளவு மழுங்கடிக்கப் படுவதால் முதலாளித்துவம் தன் ஆயுளை ஓரளவு நீடிக்க இயலுமாகிறது. ஆயினும் முதலாளித்துவம் இவற்றை மனமுவந்து செய்வதும் இல்லை நீடிப்பதை விரும்புவதும் இல்லை. தவிர்க்க இயலாமை காரணமாகவே முதலாளித்துவம் சீர்திருத்தங்களை மேற்கொள்கிறது. ஆயினும் சீர்திருத்தங்கள் மேலும் மேலும் மாற்றங்களை வேண்டவும் தொழிலாளர்களது சமாதானமான போராட்ட வெற்றிகள் புதிய போரரட்டங்கட்குத் தென்பூட்டவும் காரணமாகும் போதும் முதலாளித்துவத்தின் இலாபமும் அதிகாரமும்

கொடூரத்தைக் காட்டத் தொடங்கிவிடுகிறது. அது பாசிசமாக ராணுவ ஒடுக்கு முறையாக மாறிவிடுகிறது.

முதலாளித்துவம் தன் வர்க்க நலனுக்காக இயங்கும் ஒன்று. அதற்கு இலாப நோக்கத்தைவிடப் பெரிய நோக்கம் எதுவும் இல்லை. அதன் இறுதி எதிரியான தொழிலாளி வர்க்கத்தை ஒழித்தால் தானே அழிய வேண்டும் என்பதால் ஒழிக்க இயலாது நேரடியாக மோதி நிலைக்கவும் முடியாது தத்தளிக்கும் முதலாளித்துவம் தொழிலாளிவர்க்கத்தின் போராட்டத்தை ஒடுக்கவும் திசைதிருப்பவும் எவருடனும் கூட்டுச்சேரத் தயங்குவதில்லை எனவே தன் வளர்ச்சியின் தேவை கருதி தான் முன்பு எதிர்த்துப் போரிட்ட பழமைவாதம், மத அதிகார பீடங்கள், நிலமான்ய ஸ்தாபனங்கள் ஆகியவற்றுடன் கூட்டுச்சேரத் தயங்குவதில்லை.

முதலாளித்துவத்தின் வளர்ச்சி உலகில் ஒரு சீரான முறையில் ஏற்படாமை முதலாளித்துவத்தின் இயல்போடு உடன்பாடானதே. எனவே முதலாளித்துவ முறைக்குள்ளேயே பல்வேருன முரண்பாடுகள் உள்ளன. தொழிலாளிவர்க்கம் இவற்றையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி எவ்வாறு தன் வெற்றியை துரிதப்படுத்த முடியும் என்பது பற்றியும், முதலாளித்துவம் மேற்கில் ஏகாதிபத்தியமாக வளர்ந்ததன் மூலம் ஒருபுறம் தன் பிரச்சினையைத் தீர்த்து மறுபுறம் தன் அழிவை மேலும் பயங்கரமானதாக்கிக் கொண்டுள்ளதைப்பற்றியும் பின்பு ஒரு சமயம் கவனிப்போம்.

முதலாளித்துவம் மனிதனின் பேராசை, சுயநலம் ஆகியவற்றிலேயே தன் வளர்ச்சிக்குத் தங்கி நிற்கிறது. முதலாளித்துவம் தன்னையே அழிக்கும் சக்திகளையும் தன் பேராசை காரணமாக உருவாக்கி வளர்த்து விடுகிறது தன்னை அழிவினின்று காக்க

இன்றைய சூழலில் இவ்வாறான குழப்பங்கள் நமக்கு அதிசயம் தருவன அல்ல.

முதலாளித்துவம் என்பது ஒரு சமுதாய உற்பத்தி உறவு சார்ந்தது. அந்த உற்பத்தி உறவுள்ள சமுதாய அமைப்பு முதலாளித்துவ சமுதாய அமைப்பு. அதன் மூலம் நன்மைபெறும் சமுதாயப்பிரிவினரின் நலன் பேணவும் அந்த அமைப்பை நிலை நிறுத்தவும் நீடிக்கவும் முனையும் அரசு முதலாளித்துவ அரசு. முதலாளித்துவ அரசுக்கு உடன்பாடாக நடக்கக் கூடிய அரசியல் முதலாளித்துவ அரசியல்.

முதலில் முதலாளித்துவத்தின் அடிப்படையான உற்பத்தி உறவைக் கவனிப்போம். முதலாளித்துவம் நவீன உற்பத்தி முறையின் வருகையை ஒட்டி உருவான ஒன்று. பண்டங்களை உற்பத்தி செய்யவும் விநியோகிக்கவுமான சாதனங்களைத் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுள்ள ஒரு சமுதாயப்பிரிவினர் அந்தப் பண்டங்களை உற்பத்தி செய்யும் மனிதர்களது உழைப்பை, இன்னும் சரியாகச் சொன்னால் உழைப்புச் சக்தியை, வாங்குகிறார்கள். அதன் மூலம் உருவாகும் பண்டங்களுடைய பெறுமதியில் உழைப்பின் மூலம் வழங்கப்பெற்றதில் ஒரு பகுதி தொழிலாளிக்குக் கூலியாக வழங்கப்படுகிறது. உழைப்பால் வழங்கப்பட்ட பெறுமதியில் மிகுதி, அதாவது பண்டத்தின் உபரி மதிப்பு. அந்த உழைப்பை வாங்கிய முதலாளியால் இலாபமாகக் கறக்கப்படுகிறது. இதன் மூலம் தொழிலாளியின் உழைப்பின் பலன் அவனுக்கு முழுமையாக வந்து சேர மாட்டாது பறிக்கப்படுகிறது. அவனை ஒரு திறமையான உழைக்கும் யந்திரமாகப் பேணும் அளவிற்கு மட்டுமே ஊதியம் அவனுக்கு வழங்கப் படுவதால் முதலாளியின் லாபம் அதிகமாகிறது. அந்த லாபம் முதலாளியின் வாழ்வின் தேவைகட்கும் மிகவும் மேலாக இருப்பதால் அதனை மேலும் முதலிடுவதன் மூலம் மேலும் உற்பத்தியைப் பெருக்கவும் இலாபத்தைக் குவிக்கவும் சாத்தியமாகிறது. இத்தவகை சித்திரம் பழைய நிலமான்ய சமுதாயத்தில் இருந்து வளர்ந்த முதலாளித்துவ முறையை வர்ணிக்க ஒரளவு போதுமானது. இந்த அடிப்படையில் மேலும் சிறிது நோக்குவோம்.

...யாகி விடுகிறது.

முதலாளித்துவத்தின் வளர்ச்சி இலாப வேட்கையை அடிப்படையாகக் கொண்டது. எனவே, சமுதாயத்தில் உள்ள நடுத்தர வர்க்கங்களான சில்லறை வியாபாரிகள், சிறு உற்பத்தியாளர்கள் போன்றோரை முதலாளிகள் விட்டுவைப்பதில்லை. எனவே இவர்களில் ஒரு சிலர் புதிய முதலாளிகளாகிறார்கள். பிறரின் நிலையோ, உழைப்பை விற்கும் நிர்ப்பந்தத்தை நோக்கித் தள்ளப்படுகிறது. இதன் மூலம் வர்க்கங்களிடையிலான வேற்றுமையும் பகைமையும் கூர்மையடைகின்றன.

முதலாளித்துவம் ஒரு தொழிலாளியிடம் இருந்து வேண்டுவது அதிகளவு உற்பத்தி. எனவே அவனுக்குத் தொழிற்பயிற்சி அளிப்பது அவசியமாகிறது அதற்குக் கல்வி அவசியமாகிறது. ஆனால் கல்வி அறிவு தொழிலாளிக்குத் தொழிலைக் கற்பிப்பதோடு நின்றுவிடுவதில்லை. தன் சூழலையும் சமுதாய நிலையையும் ஆராய்வதற்கும் அறிவதற்கும் அது தொழிலாளிக்கு வாய்ப்பை ஏற்படுத்துகிறது. எனவே தொழிலாளி வர்க்கம் ஒன்றுபடவும் போராடவும் மேலும் சாத்தியமாகிறது.

முதலாளித்துவம் கட்டவிழ்த்துவிட்ட உற்பத்திச் சக்திகள் உற்பத்தியின் அளவுகளை முன் கண்டிராத அளவுக்கு நாளடைவில் பெருக்கி விடுகிறது. இதன் விளைவாக அவற்றை விற்பதற்கான சந்தைகட்கான தேவை ஒருபுறம் முதலாளித்துவத்தினுள்ளே கழுத்தறுப்புப் போட்டா போட்டிகளையும் தேசிய எல்லைகட்கு அப்பால் சந்தைகளைத் தேட வேண்டிய நிர்ப்பந்தங்களையும் உருவாக்குகிறது. எனவே முதலாளித்துவம் தன்னை ஸ்திரமான ஒரு நிலையில் நிறுத்திக் கொள்ள முடியாமல் தொடர்ந்து வாழ்வதனால் மேலும் வளர்வதைவிட வழியில்லாத நிர்ப்பந்தத்திற்கும், வளர்வதற்கு மற்றையோரை ஒழிக்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கும் தன்னைத் தள்ளி விடுகிறது. இதன் தொடர்ச்சியாக முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாக வளர்ந்து தேசங்கட்கிடையிலான யுத்தங்கட்கு வழிவகுக்கிறது.

முதலாளித்துவத்தின் வளர்ச்சி அதனுள்ளேயே அதன் அழிவுச் சக்திகளை உருவாக்கவும் அவற்றுக்கு வலியூட்டவும் சாத்தியமாகிறது

[...] தாய மரபுகளையும் எதிர்க்கும் தேவை அதற்கு இருந்தது. எனவே ஒரு வகையில் அது ஒரு விடுதலைச் சக்தியாகச் செயற்பட்டது. ஆனால் நிலமான்ய முறை முறியடிக்கப் பட்டு முதலாளித்துவம் நிலை நிறுத்தப்பட்ட பின்பு, முதலாளித்துவ சமுதாயத்தின் அழிவுக்கு அது உருவாக்கிய தொழிலாளி வர்க்கமே காரணமாகும் என்பதை முதலாளித்துவம் உணர நபளாகவில்லை. எனவே தொழிலாளி வர்க்கத்தை அடக்கவும், பிளவுபடுத்தவும் மயக்கவும் வெவ்வேறு தந்திரங்களை உபயோகிக்கவும் அது முற்பட்டது.

தொழிலாளர்களின் போராட்டங்களை எதிர்க்க ஆதியில் தொழிற்சங்க எதிர்ப்புச் சட்டங்கள் போன்றன மூலம் அரசாங்கம், காவல் துறை, நீதித்துறை ஆகியன பயன்பட்டன. பின்பு அப்போராட்டங்கள் தொடர்ந்தால் சமுதாய அமைப்பே சீர் குலையும் என்று தெளிவானதால் சீர்திருந்தங்கள் மூலம் தொழிலாளர்களது போராட்டவேகம் தளர்த்தப் பட்டது. பின்பு முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாக வளர்ச்சி பெற்றதன் மூலம் சுரண்டலின் சுமையின் பெரும்பகுதி தேசிய எல்லைகட்கு வெளியே தள்ளப்பட்டது. இதனால் வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாட்டின் தொழிலாளர்களின் சுமை சிறிது குறைக்கப்பட்டது. இவ்வாறு தொழிலாளர்களிடையிலான வாழ்க்கைத் தரத்தின் ஏற்றத் தாழ்வுகளைப் பயன்படுத்தி தேசியவாதத்தின்மூலம் தொழிலாளிவர்க்கத்தின் சர்வதேசிய ஐக்கிய உணர்வுக்கு எதிரான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

தொழிலாளர்கள் அதிக ஊதியத்திற்கும் உரிமைகட்கும் போராடுவதை முறியடிப்பதற்கு அவர்களிடையே கருங்காலிக்கட்டு உற்சாகமூட்டும் செயல்கள் இன்று வரை பல்வேறு முறைகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது மட்டுமன்றித் தொழிலாளர்களைத் தொழிலின் தன்மை, திறமை, ஊதியம் ஆகிய அடிப்படைகளில் பிரிக்கவும் ஒன்றுபடாது தடுக்கவும் முதலாளித்துவம் உற்சாகமூட்டுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக நாட்டில் வேலையில்லாதோர் தொகை ஒன்றை நிரந்தரமாகவே பேணுவதன் மூலம் அதிக ஊதியத்திற்காக தொழிலா...

[...] திருப்திப்படுத்த முடியுமானால் அதையும் முதலாளித்துவம் தவிர்ப்பதில்லை. எனவே தொழிலாளர் போராட்டங்கள் அடிப்படையான சமுதாய மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு முன்னமே முதலாளித்துவம் சமரசத்துக்கு ஆயத்தமாகிவிடுகிறது. அதன் விளைவாகவே பல்வேறு சமூக சீர்திருத்தங்களும் மேற்கொள்ளப்படுகின்றன. ஜனநாயக உரிமைகள், சமுதாய நலன் பேணும் ஸ்தாபனங்கள் போன்றவை தொழிலாளி வர்க்கத்திற்கு வரையறைக்குட்பட்ட உரிமைகளையும் நலன்களையும் வழங்குவதால் போராட்டத்திற்கான தேவையும் போராட்ட உணர்வும் ஒரளவு மழுங்கடிக்கப் படுவதால் முதலாளித்துவம் தன் ஆயுளை ஒரளவு நீடிக்க இயலுமாகிறது. ஆயினும் முதலாளித்துவம் இவற்றை மனமுவந்து செய்வதும் இல்லை நீடிப்பதை விரும்புவதும் இல்லை. தவிர்க்க இயலாமை காரணமாகவே முதலாளித்துவம் சீர்திருத்தங்களை மேற்கொள்கிறது. ஆயினும் சீர்திருத்தங்கள் மேலும் மேலும் மாற்றங்களை வேண்டவும் தொழிலாளர்களது சமாதானமான போராட்ட வெற்றிகள் புதிய போரரட்டங்கட்குத் தென்பூட்டவும் காரணமாகும் போதும் முதலாளித்துவத்தின் இலாபமும் அதிகாரமும் குறைவுபடும் போதும் முதலாளித்துவம் தான் அனுமதித்த உரிமைகளைப் பறிக்கத் தயங்குவதில்லை. அப்போது முதலாளித்துவத்தின் ஜனநாயக முகமூடி கிழிந்து சட்டம் ஒழுங்கு என்ற பெயர்களில் செயற்பட முடியாது போய் விடுகிறது; கருணை, இரக்கம் என்ற பேரில் செய்யப்படும் சமூக நலன் நடவடிக்கைகளை பொருளாதாரக் காரணங்களால் மறுக்கப்பட நேருகிறது. முதலாளித்துவம் தன் உண்மையான அடக்குமுறை

திசைதிருப்பவும் எவருடனும் கூட்டுச்சேரத் தயங்குவதில்லை எனவே தன் வளர்ச்சியின் தேவை கருதி தான் முன்பு எதிர்த்துப் போரிட்ட பழமைவாதம், மத அதிகார பீடங்கள், நிலமான்ய ஸ்தாபனங்கள் ஆகியவற்றுடன் கூட்டுச்சேரத் தயங்குவதில்லை.

முதலாளித்துவத்தின் வளர்ச்சி உலகில் ஒரு சீரான முறையில் ஏற்படாமை முதலாளித்துவத்தின் இயல்போடு உடன்பாடானதே. எனவே முதலாளித்துவ முறைக்குள்ளேயே பல்வேறான முரண்பாடுகள் உள்ளன. தொழிலாளிவர்க்கம் இவற்றையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி எவ்வாறு தன் வெற்றியை துரிதப்படுத்த முடியும் என்பது பற்றியும், முதலாளித்துவம் மேற்கில் ஏகாதிபத்தியமாக வளர்ந்ததன் மூலம் ஒருபுறம் தன் பிரச்சினையைத் தீர்த்து மறுபுறம் தன் அழிவை மேலும் பயங்கரமானதாக்கிக் கொண்டுள்ளதைப்பற்றியும் பின்பு ஒரு சமயம் கவனிப்போம்.

முதலாளித்துவம் மனிதனின் பேராசை, சுயநலம் ஆகியவற்றிலேயே தன் வளர்ச்சிக்குத் தங்கி நிற்கிறது. முதலாளித்துவம் தன்னையே அழிக்கும் சக்திகளையும் தன் பேராசை காரணமாக உருவாக்கி வளர்த்து விடுகிறது தன்னை அழிவினின்று காக்க அது மேற்கொள்ளும் ஒவ்வொரு காரியமும் அது தீர்க்கமுயன்ற பிரச்சினையை விடப் பாரியதும் கடியதுமான நெருக்கடிகளையே அதற்குத் தோற்றுவிக்கின்றன. முதலாளித்துவத்தின் அழிவு வரலாற்றில் தவிர்க்க முடியாதது. அது எவ்வளவு விரைவில் சாத்தியமாகும் என்பது பாட்டாளிவர்க்கத்தினதும் உலகின் பிற ஒடுக்கப்பட்ட மக்களின் கையிலுமே தங்கியுள்ளது. ★

## மா ஓ சேதுங்

ஸ்தூலமான நிலைமைகளின் ஸ்தூலமான ஆராய்வு என்பது ''மார்க்ஸிஸத்தில் மிக அடிப்படையான விஷயம். மார்க்ஸிஸத்தின் ஜீவாத்மா'' என்று லெனின் கூறினார். தமது தோழர்களில் பலருக்கு ஆராய்ந்து பார்க்கும் அணுகுமுறை குறைவு. அவர்கள் சிக்கலான விஷயங்களில் ஆழமாகச் செல்லவோ, அவற்றை மீண்டும் மீண்டும் ஆராய்ந்து படிக்கவோ விருப்புகிறார்களில்லை. மாறாக, ஒன்றில் முற்றிலும் உடன்பாடான அல்லது முற்றிலும் எதிர்மறையான சாமானிய முடிவுகளை எடுக்க அவர்கள் விரும்புகின்றனர்... இன்று முதல் நாம் இத்தகைய நிலைமைக்குப் பரிகாரம் செய்து கொள்ள வேண்டும்.

# அந்நிய மோகமும் ஆபாசப் படங்களும் தமிழர் கலாச்சாரத்தை நாசம் செய்கின்றன!

தமிழர்களின் கலாச்சாரம், தமிழர்களின் தனித்துவம், தமிழர்களின் தொன்மை பற்றியெல்லாம் ஒருபுறத்தே பழம்பெருமை பேசப்படுகிறது. மறுபுறத்தே அந்நிய மோகத்தில் முற்றுமுழுதாக மூழ்கி எழுந்து தமிழர் கலாச்சாரத்தின் நல்ல பல அம்சங்கள் எல்லாம் குழிதோண்டிப் புதைக்கப்படுகின்றன. முன்பு எல்லாம் உயர்வர்க்கத் தமிழர்களால் மட்டும் செய்யப்பட்டு வந்த இக் கலாச்சாரக் கொலைகள் காலப்போக்கில் மத்தியதர வர்க்கத்தாரிடம் வந்து இன்று கீழ் மத்தியதரவர்க்கத்திடமும் பரவி கிராமப் புறங்களையும் பயமுறுத்தி நிற்கும் பிரச்சனையாகிவிட்டது. இவ்வித நிலைமை வேகமாக வளருவதற்கு யூ. என். பியின் திறந்த கதவுப் பொருளாதாரக் கொள்கையும், வெளிநாட்டு வேலைவாய்ப்புகளின் தன்மைகளும் அதிக காரணத்தை ஏற்படுத்தியுள்ளன. உதாரணமாக மேற்கத்தியப் பாணியில் ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து பிறந்ததினம் கொண்டாடும் முறையானது வேகமாக மக்கள் மத்தியில் பரவி வருவதைக் காணமுடிகிறது. இதே போல் நடை/உடை பாவனை என்பன வெல்லாம் மேற்கத்திய பாணியில் கிராமப்புறங்களில் பற்றிப் பரவ முனைகிறது. இத்தகைய அந்நிய கலாச்சாரப்பாணி எவ்வித எதிர்ப்போ, மனக்கோணலோ இன்றி ஏதோ கிடைத்தற் கரியதொன்று என்ற நிலையில் கையேற்கப்படுகிறது. இந்நாட்டின் சகோதரமொழியான சிங்கள மொழி கற்க முற்பட்டால், அவ் இனத்தின் கலை கலாச்சாரங்களின் நல்ல அம்சங்களை கவனத்தில் எடுக்க முனைந்தால் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும், தமிழர் கலாச்சாரத்திற்கும் ஆ! ஊ! ஆபத்து வந்துவிட்டது என அலறி அடிப்பவர்கள் அந்நிய கலாச்சாரத்தின் மிகவும் மோசமான தாக்கங்கள் தமிழர் சமுதாயத்தில் பரப்பப்படும் இவ்வேளை அவற்றைக் கண்டும் மௌனியாகி இருக்கிறார்கள். இதை விட்ட அடிமைத்தனம் வேறு எதுவாக இருக்கமுடியும். இன்று தமிழர்கள் மத்தியில் பிள்ளைகளுக்குப் பெயர் வைப்பதில் இருந்து உறவுமுறைகள் அழைக்கப்படுவது வரை மிக வேகமான முறையில் அந்நிய பெயர்களும், சொற்களும் தாராளமாகப் பயன்படுத்தப்பட்டு அதுவே உயர் நாகரீகமாகவும் பின்பற்றப் படுகிறது.

இவ்வாறான பல கலாச்சாரச் சீரழிவுகள் மேற்கில் இருந்து மட்டுமன்றி இந்தியாவிலும் குறிப்பாகத் தென் இந்தியாவிலும் இருந்தும் நம் நாட்டுக்கு இறக்குமதியாகின்றன, தென் இந்தியச் சினிமாவின் தாக்கம் மிகப் பெரியதாகும். நமது நாட்டில் சிங்கள சினிமாத்துறை வளர்ந்த வேகத்திற்கும் தரத்திற்கும் தமிழ் சினிமா வளர முடியாமைக்கு தென் இந்திய சினிமாவின் மிகப் பெரிய தாக்கமும் ஆதிக்கமும் மட்டுமன்றி அதை கேள்வி நியாயமின்றி அடிமைத்தனமாக ஏற்றுக் கொள்கின்ற போக்கும் தமிழர்கள் மத்தியில் உண்டு. இந்தியாவில் நூறுநாள் ஓடிய ஒரு தமிழ் சினிமா என்று விளம்பரம் செய்வதால் அது இலங்கையில் நூற்றி ஐம்பதுநாள் ஓடவேண்டும் என எதிர்பார்ப்பது ஒரு வகையில் மக்களை நிர்ப்பந்திப்பது அல்லது அடிமைத்தனத்தை வளர்ப்பது என்று கூறுவதில் தவறிருக்காது.

அதே வேளை கட்டுப்பாடற்ற தாராள இறக்குமதி மூலம் மேற்கத்திய சினிமாவும், சஞ்சிகைகளும் அதே போல் தென் இந்திய நச்சு இலக்கியங்களும் இங்கு இறக்குமதி செய்யப்பட்டு பரப்பப் படுகின்றன. இவற்றில் ஆபாச இலக்கியங்களும் புகைப்படங்களும் கூச்சநாச்சமின்றி அதிக விற்பனையைப் பெறுகின்றன. ஆபாசப் படங்கள் மினி தியேட்டர்கள் தொட்டு மினி வீடுகள் வரையில் காட்டப் படுகின்றன. நகரத்தில், கிராமத்தில் மக்கள் பணத்தைக் கொடுத்து சீரழிவுகளை போதியளவு பெற்றுக்கொள்கிறார்கள். இவற்றுடன் கூடவே போதை வஸ்த்துக்கள் பரவி வருகின்றன. இவை வெளியில் தெரிவது அரிது. காரணம் இன்றைய சூழ்நிலையில் மக்களின் கவனம் பிரச்சினைகள், போராட்டம், அடக்குமுறைகள், அன்றாடவாழ்வுப் பிரச்சினைகள் என்பவற்றில் திரும்பி இருக்க மேற்படி சீரழிவுகள் தமது நாசவேலைகளைத் தொடருகின்றன. பணம் பறிக்கும் கூட்டம் தம் கைங்கரியத்தைச் செய்யவே செய்கின்றன. முதலாளித்துவத்திற்கு தேவை லாபமும். பணப் பெருக்கலுமே அன்றி ஒரு சமுதாயத்தின் நல்ல ஆரோக்கியம் அல்ல. ஆதலால் நாடு முழுவதற்கும் அதேபோல் தமிழர் சமுதாயத்திற்கும் பெரும் அச்சுறுத்தலாக வளர்ந்துள்ள அந்நிய மோகமும் ஆபாசக்குப்பைகளின் ஆதிக்கமும் முறியடிக்கப்படுவதற்கு ஆக்கபூர்வமான வழிவகைகள் தேடப்படவேண்டும். தமிழர் சமுதாயத்தில் சிறந்தவை எனக் கருதப்படும் கலாச்சார அம்சங்களை பாதுகாக்கவும் அவற்றை மக்கள் மத்தியில் பிரசாரம் செய்யவும் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இப்பணி கேவலமான முதலாளித்துவ அமைப்புமுறை முற்று முழுதாகத் தோற்கடிக்கப்படுவதினால் தான் பூர்த்தியாக்கப்பட முடியுமான போதிலும் அது

மையான விடுதலை விரும்பும் கற்றோரும் மற்றோரும் துணிவுடன் முன்வந்து தவறான கலாச்சாரச் சீரழிவுகளைத் தடுத்து நிறுத்தவேண்டும். இல்லாவிடின் அந்நியமோகம் மேற்கில் இருந்தும் வடக்கில் இருந்தும் தனது நச்சுத் தனங்களை பரப்பி நமது மக்களைச் சீரழிக்க முற்படுவதில் இருந்து பாதுகாக்க முடியாது போய் விடும். ★

## சிந்திக்கவேண்டிய செய்திகள்

★ வறுமை நிவாரணத்தைத் திறமையாக ஒழுங்குபடுத்தி நடத்தவென வறுமை நிவாரணச் சட்டமூலம் ஒன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ளது.

—பத்திரிகைச் செய்தி

★ 'மாசல்லோ (ராணுவச் சட்டம்) வேண்டாம்' 'பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நிறைவேற்று அதிகாரம் வேண்டாம்', ''துணை இராணுவப் படை வேண்டாம்'' என்பனவற்றை வலியுறுத்தும் சிங்கள-தமிழ் மொழியிலான துண்டுப்பிரசுரம் தென்இலங்கையில் பெரும் தொகையாக விநியோகிக்கப்பட்டு வருகிறது.

—நமது நிருபர்

★ இந்தியா சுதந்திரம் பெற்று 38 வருடங்களாகியும் கூட தாழ்த்தப்பட்டோர் பற்றிய எண்ணங்கள் மாறவில்லை. இது மிகவும் கவலையளிக்கக்கூடிய தொன்றாகும்.

—ரஜீவ் காந்தி

★ உலகின் பல்வேறு பிராந்தியங்களில் ஏற்பட்டுள்ள பயங்கரவாத அச்சுறுத்தல்களை முறியடிக்க உலகம் தழுவிய ரீதியில் எடுக்கப்படும்

# ஊர்காவல் படையால் உயிர் ஆபத்துக்கள்!

அரசாங்கம் ஊர்காவல் படை அமைத்தது பற்றியும் அப்படைக்கு பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கிய நடைமுறைகளும் யாவரும் அறிந்ததே. அரசாங்க எம் பீ மார்களின் சிபார்சுடன் இவ் ஊர்காவல் படைக்கு ஆட்கள் தெரிவுசெய்யப்பட்டனர். இந்த ஊர்காவல் படை அமைப்பு முறை விபரீதமான விளைவுகளைக் கொண்டு வரும்

பல குரல்கள் எதிர்த்தொலித்தன. ஆனால் அரசு தனது பிடிவாதத்தைச் சாதித்து அப்படையை அமைத்தது.

இப்படை அமைக்கப்பட்டு அவற்றுக்கு பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கப்பட்டு அதிக காலம் செல்லவில்லை. அப்படையின் விபரீத விளைவுகள் மோசமாகி வருவதைப் பலரும் சுட்டிக்காட்ட ஆரம்பித்துள்ளனர். அண்மையில்

ரத்து செய்யவேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்திருக்கிறது. அதைத் தொடர்ந்து அதற்கு ஆதரவாகப் பல வற்புறுத்தல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவ் ஊர்காவல் படையின் ஆயுதங்கள் சொந்தக் குரோதங்களுக்குப் பாவிக்கப்பட்டுள்ளதைப் பலரும் எடுத்துக் காட்டியுள்ளனர். அதனால் அநுராதபுரப் பகுதியில் பல

யும் பயமுறுத்தி நிற்கும் பிரச்சனையாகிவிட்டது. இவ்வித நிலைமை வேகமாக வளருவதற்கு யூ. என். பி யின் திறந்த கதவுப் பொருளாதாரக் கொள்கையும், வெளிநாட்டு வேலைவாய்ப்புகளின் தன்மைகளும் அதிக காரணத்தை ஏற்படுத்தியுள்ளன. உதாரணமாக மேற்கத்தியப் பாணியில் ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து பிறந்ததினம் கொண்டாடும் முறையானது வேகமாக மக்கள் மத்தியில் பரவி வருவ அலறி அடிப்பவர்கள் அந்நிய கலாச்சாரத்தின் மிகவும் மோசமான தாக்கங்கள் தமிழர் சமுதாயத்தில் பரப்பப்படும் இவ்வேளை அவற்றைக் கண்டும் மௌனியாகி இருக்கிறார்கள். இதை விட்ட அடிமைத்தனம் வேறு எதுவாக இருக்கமுடியும். இன்று தமிழர்கள் மத்தியில் பிள்ளைகளுக்குப் பெயர் வைப்பதில் இருந்து உறவுமுறைகள் அழைக்கப்படுவது வரை மிக வேகமான முறையில் அந்நிய பெயர்களும், சொற்களும் அதை கேள்வி நியாயமின்றி அடிமைத்தனமாக ஏற்றுக் கொள்கின்ற போக்கும் தமிழர்கள் மத்தியில் உண்டு. இந்தியாவில் நூறுநாள் ஓடிய ஒரு தமிழ் சினிமா என்று விளம்பரம் செய்வதால் அது இலங்கையில் நூற்றி ஐம்பதுநாள் ஓடவேண்டும் என எதிர்பார்ப்பது ஒரு வகையில் மக்களை நிர்ப்பந்திப்பது அல்லது அடிமைத்தனத்தை வளர்ப்பது என்று கூறுவதில் தவறிருக்காது.

வருகின்றன. இவை வெளியில் தெரிவது அரிது. காரணம் இன்றைய சூழ்நிலையில் மக்களின் கவனம் பிரச்சினைகள், போராட்டம், அடக்குமுறைகள், அன்றாடவாழ்வுப் பிரச்சினைகள் என்பவற்றில் திரும்பி இருக்க மேற்படி சீரழிவுகள் தமது நாசவேலைகளைத் தொடருகின்றன. பணம் பறிக்கும் கூட்டம் தம் கைங்கரியத்தைச் செய்யவே செய்கின்றன. முதலாளித்துவத்திற்கு தேவை லாபமும். பணப் பெருக்கலுமே அன்றி ஒரு சமுதாயத்தின் நல்ல ஆரோக்கியம் அல்ல. ஆதலால் நாடு முழுவதற்கும் அதேபோல் தமிழர் சமுதாயத்திற்கும் பெரும் அச்சுறுத்தலாக வளர்ந்துள்ள அந்நிய மோகமும் ஆபாசக்குப்பைகளின் ஆதிக்கமும் முறியடிக்கப்படுவதற்கு ஆக்கபூர்வமான வழிவகைகள் தேடப்படவேண்டும். தமிழர் சமூதாயத்தில் சிறந்தவை எனக் கருதப்படும் கலாச்சார அம்சங்களை பாதுகாக்கவும் அவற்றை மக்கள் மத்தியில் பிரசாரம் செய்யவும் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். இப்பணி கேவலமான மூதலாளித்துவ அமைப்புமுறை மூற்று முழுதாகத் தோற்கடிக்கப்படுவதினால் தான் பூர்த்தியாக்கப்பட முடியுமான போதிலும் அதுவரை இவ்வகையான கலாச்சாரச் சீரழிவுகளை எவரும் அனுமதிக்கவோ, பார்த்திருக்கவோ முடியாது. உண்மையான சமூதாய நலன் நாடும், தமிழர்களின் உண்

★ வறுமை நிவாரணத்தைத் திறமையாக ஒழுங்குபடுத்தி நடத்தவென வறுமை நிவாரணச் சட்டமூலம் ஒன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ளது.

—பத்திரிகைச் செய்தி

★ 'மாசல்லோ (ராணுவச் சட்டம்) வேண்டாம்' 'பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நிறைவேற்று அதிகாரம் வேண்டாம்', ''துணை இராணுவப் படை வேண்டாம்'' என்பனவற்றை வலியுறுத்தும் சிங்கள-தமிழ் மொழியிலான துண்டுப்பிரசுரம் தென்இலங்கையில் பெரும் தொகையாக விநியோகிக்கப்பட்டு வருகிறது.

—நமது நிருபர்

★ இந்தியா சுதந்திரம் பெற்று 38 வருடங்களாகியும் கூட தாழ்த்தப்பட்டோர் பற்றிய எண்ணங்கள் மாறவில்லை. இது மிகவும் கவலையளிக்கக்கூடிய தொன்றாகும்.

—ரஜீவ் காந்தி

★ உலகின் பல்வேறு பிராந்தியங்களில் ஏற்பட்டுள்ள பயங்கரவாத அச்சுறுத்தல்களை முறியடிக்க உலகம் தழுவிய ரீதியில் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு இந்தியா தனது பூரண ஒத்துழைப்பை வழங்கும்.

—குர் ஷிட் ஆலம்கான்

# ஊர்காவல் படையால் உயிர் ஆபத்துக்கள்!

அரசாங்கம் ஊர்காவல் படை அமைத்தது பற்றியும் அப்படைக்கு பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கிய நடைமுறைகளும் யாவரும் அறிந்ததே. அரசாங்க எம் பீ மார்களின் சிபார்சுடன் இவ் ஊர்காவல் படைக்கு ஆட்கள் தெரிவுசெய்யப்பட்டனர். இந்த ஊர்காவல் படை அமைப்பு முறை விபரீதமான விளைவுகளைக் கொண்டு வரும் என்றும் இத் திட்டத்தைக் கைவிட வேண்டும் என்றும் பல குரல்கள் எதிர்த்தொலித்தன. அனால் அரசு தனது பிடிவாதத்தைச் சாதித்து அப்படையை அமைத்தது.

இப்படை அமைக்கப்பட்டு அவற்றுக்கு பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கப்பட்டு அதிக காலம் செல்லவில்லை. அப்படையின் விபரீத விளைவுகள் மோசமாகி வருவதைப் பலரும் சுட்டிக்காட்ட ஆரம்பித்துள்ளனர். அண்மையில் அனுராதபுர பிரஜைகள் குழு ஊர்காவல் படைமுறையை ரத்து செய்யவேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்திருக்கிறது. அதைத் தொடர்ந்து அதற்கு ஆதரவாகப் பல வற்புறுத்தல்கள் வெளி வந்து கொண்டிருக்கின்றன. இவ் ஊர்காவல் படையின் ஆயுதங்கள் சொந்தக் குரோதங்களுக்குப் பாவிக்கப்பட்டுள்ளதைப் பலரும் எடுத்துக் காட்டியுள்ளனர். அதனால் அநுராதபுரப் பகுதியில் பல கொலைகள் இடம் பெற்றிருக்கின்றன என்றும் கூறப்படுகிறது. ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவர் தனக்கு வழங்கப்பட்ட துப்பாக்கி

(6-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களின்...

3-ம் பக்கத் தொடர்

காரப் பரவலாக்கல் என்ற பெயரில் மாவட்ட சபை அமைப்பு மூலம் சில சலுகைகள் வழங்கவும் அச் சலுகைகளுக்கான பிடி கயிற்றை தனது கையில் வைத்திக்கவும் முனைகிறது. ஆனால் இத்தகைய அதிகாரப்பரவலாக்கலின் மூலம் தமிழ் மக்களின் உள்ளார்ந்த அபிலாஷைகள் நிறைவு பெற மாட்டாது. இன்று தேவைப்படுவது தமிழ் மக்கள் தமது பாரம்பரிய பிரதேசங்களில் தமது நிர்வாகத்தையும், தமது பொருளாதாரம், கல்வி, கலாச்சார வளர்ச்சி உள்ளிட்ட அனைத்தையும் எவ்வித குறுக்கீடும், தலையீடும் இன்றி தாமே கவனித்துக் கொள்ளக் கூடிய ஒரு பிரதேச சுயாட்சித் தன்மைகொண்ட அமைப்பு முறையேயாகும். இந்த அமைப்பு முறை பெயர் ரீதியில்அல்லது அதற்குத்தலைமை தாங்குவோருக்கான பதவி ரீதியில் கச்சிதமாக அமைகிறதா இல்லையா என்பதல்லப் பிரதானம். முக்கியமானது உருவாக்கப்படும் சுயாட்சி அமைப்பானது வடக்கு, கிழக்கு, மலையக மக்களின் இனப் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்ட அவர்களது அபிலாஷைகளுக்கு குறைந்த பட்சமான தீர்வுகளையாவது உள்ளடக்கி இருக்கவேண்டும் என்பதேயாகும்,

எனவே பூட்டானில் அடுத்தமாதம் இடம்பெற உள்ள இனப் பிரச்சினைக்கான இரண்டாம் கட்டப் பேச்சு வார்த்தையின் போது அரசு தனது பழைய பல்லவியான அதிகாரப் பரவலாக்கல் என்பதை புதுராகத்தில் பாடாது முற்றிலும் தமிழ் மக்களின் அபிலாஷைகள் ஈடேறக் கூடிய புதிய யோசனைகளை ஆக்கபூர்வமான வழிகளில் முன்வைக்க முன்வரல் வேண்டும். அவ்வாறு அரசு முன்வைக்கத் தவறின் அதன் விளைவுகள் நாட்டுற்கும் முழு மக்களுக்கும் நல்லதாக அமையாது. ★

## விசாரணைகளு...

2ம் பக்கத் தொடர்

பாட்டை எழுதிக் கொடுத்தால் அதில் கூறப்பட்டவை சரியா? பிழையா? அல்லது அதற்கு ஆதாரம் உண்டா? இல்லையா? என்பதைப்பற்றி எவ்வித கேள்வி நியாயமும் இன்றி ஒருவரை விசாரணைக்கு அழைத்துச் செல்வது காணக் கூடியதாகவுள்ளது. இரகசிய விசாரணைகளும், பக்கம் சார்ந்த தீர்ப்புகளும் வழங்கப் படுவதாக மக்கள் அதிருப்தியுடன் பேசிக்கொள்கிறார்கள்.

இந்த முறை மக்களை வலுவாகப் பாதித்துள்ளது. குற்றம் செய்பவர்கள் நிறைந்த இந்த சமூதாயத்தில் குற்றவாளிகளை எவ்வாறு தரம் பிரிப்பது. அக்குற்றங்களுக்கான ஆதாரங்கள் என்ன? குற்றவாளிகளுக்கு வழங்கும் தண்டனைகள் எவை? இவற்றை ஒரு சிலரின் விருப்பு வெறுப்புக்கு ஏற்றவாறு செய்யலாமா? முதலாளித்துவ சட்டதிட்டங்களில் கூட ஒரு வாறான ஒழுங்கு உண்டு. மக்களுக்கு மதிப்புக் கொடுக்காது ஆயுதம் வைத்திருக்கும் ஒரு காரணத்தால் மக்களையே மிரட்டவும், தமது விருப்பு வெறுப்பிற்கு ஏற்றவாறு விசாரணை செய்யவும், தீர்ப்புகள் வழங்கி அதை நிறைவேற்றவும் செய்கின்ற போக்கு உண்மையில் மக்கள் விரோதமானதென்றே கூற வேண்டும். சில சமூக விரோதிகள், உளவாளிகள், ஒற்றர்கள், மக்கள் விரோதிகள் நிச்சயம் விசாரிக்கப்படவேண்டியவர்களே. அவர்கள் கூட மக்கள் மத்தியில் வைத்து விசாரிக்கப்பட்டால் மேலும் பல தகவல்களை மக்கள் வழங்குவர். அதேவேளை சில நிரபராதிகள் தவறான தண்டனைக்கு ஆளாகாமல் இருக்கவும் வாய்ப்பு ஏற்படும்.

எனவே எத்தகைய முறைப்பாடுகளாயினும் அவற்றைச் சம்பந்தப்பட்டவர் வாழும் கிராமங்களில் பொது மக்களின் ஆதரவு பெற்ற பொது ஸ்தாபனங்களின் மூலம் விசாரிக்கவும், பொதுமக்கள் சரிபிழை பற்றித் தீர்மானிக்கவும் கூடிய வகையில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவது அவசியமாகும். அப்பொழுதுதான் ஆதாரங்களின் அடிப்படையில் உண்மைகள் கண்டறியப்படவும், பக்கம்சாராத நிலை உருவாகவும் முடியும். இதுவே சரியானதாகும். இதை விடுத்து தனியே ஆயுதங்களை மட்டும் நம்பி விசாரணைகளையும் தீர்ப்புகளையும் செய்ய எவர் முற்படினும் அத்தகையவர்கள் மக்களின் நம்பிக்கையை இழந்து அவர்களது எதிர்ப்பை மட்டுமே சம்பாதிப்பர். மக்கள் எதிர்ப்பு வலுத்தால் ஆயுதங்கள் பயனற்றவையாகிவிடும். ★

செய்திப் பத்திரிகையாகப் பதிவு பெற்றது. **செம்பதாகை** Registered as a Newspaper in Sri Lanka

# 1980 யூலை வேலை நிறுத்தம் செய்தோருக்கு

# ஆட்சியே! மீண்டும் வேலை வழங்கு !!

**1980ம்** ஆண்டு யூலை மாதத்தில் முன்நூறு ரூபா சம்பள உயர்வு கேட்டு பல்லாயிரக்கணக்கான அரசாங்க—தனியார் துறைகளைச் சேர்ந்த தொழிலாளர்கள்—ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். அவ் வேலை நிறுத்தத்தை இன்றைய பாசிச யூ. என். பி ஆட்சியானது அத்தியாவவசிய சேவைகள் சட்டம் என்ற தொழிலாளர் விரோதச் சட்டத்தைக் கொண்டும், அரசு யந்திரத்தின் நேரடி பலாத்காரத்தின் மூலமும் அடக்கி ஒடுக்கியது. இதனல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் தொழிலாளர்கள் வேலை இழந்தனர். அவ்வாறு வேலை இழந்த பல்லாயிரம் தொழிலாளர்கள்—ஊழியர்கள் பல மாதங்கள், வருடங்களாக வேலை இன்றி வீதியில் விடப்பட்டனர். கடந்த ஐந்து ஆண்டுகளில் வேலை இழந்தவர்களில் மூப்பதுபேருக்குமேல் தற்கொலை செய்து கொண்டனர். சிலர் வேதனையால் திடீர் மரணங்களுக்கும் ஆளாகினர். பலர் இன்று புத்தி சுவாதீனமுற்ற நிலையில் வீதிகளில் திரிகின்றனர். பல குடும்பங்கள் வறுமையில் உழலுகின்றன.

வேலை பறிக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் வேலை வழங்கப்படுவதை முன்வைத்து தொழிற்சங்கங்களும், முற்போக்கு, இடதுசாரிக் கட்சிகளும், ஏனைய ஜனநாயக சக்திகளும் இடைவிடாது இயக்கங்கள் நடத்திவந்ததன் பயனுக படிப்படியாக வேலை நீக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் வேலை வழங்க யூ. என். பி திர்ப்பந்திக்கப்பட்டது. ஆனல் இப்பொழுது ஐந்து ஆண்டுகளின் பின்பு வேலை மீள வழங்கப்படாத ஏழாயிரம் பேர் உள்ளனர். அதே வேளை வேலைக்கு செர்த்துக் கொள்ளப்பட்டோர் தாராள பழிவாங்கலுக்கு உள்ளாகி உள்ளனர். பழிவாங்கும் இடமாற்றம், பதவி உயர்வு இல்லாமை, பாக்கிச் சம்பளம் வழங்காமை, சம்பள உயர்வு சேர்த்துக் கொள்ளாமை, சேவை நீடிப்பு கிடைக்காமை போன்ற பழிவாங்கல்களை ஊழியர்கள் தொழிலாளர்கள் அனுபவிக்க வேண்டியுள்ளது.

மேற்படி வேலைநிறுத்தம் செய்தவர்களை அரசாங்கம் ஒரு பாடம் புகட்டவேண்டும் என்ற அடிப்படையில் பழிவாங்கி வருவதை எவருமே அனுமதிக்க முடியாது. இதனல் யூ. என். பி ஆட்சியின் கேவலம் தொழிலாளி வர்க்கத்தின் மத்தியிலும், உழைக்கும் மக்கள் முன்னுலும் அம்பலமாகி உள்ளதையே காண முடிகிறது.

இவ்வேலை நிறுத்தத்தின் ஐந்தாவது ஆண்டு நினைவை அண்மையில் நாடு முழுவதிலும் உள்ள தொழிலாளர்களும் தொழிற்சங்கங்களும், கட்சிகளும் நினைவு கூர்ந்தன. யாழ்பாணத்தில் தொழிற்சங்க கூட்டுக்குழு 19ம் திகதி யாழ்—கச்சேரி முன்பு ஆர்ப்பாட்டத்தையும், மறியல் போராட்டத்தையும் நடத்தி தொழிலாளர்கள் சார்பான கோரிக்கைகளையும் அரசுக்கு எதிரான கண்டனத்தையும் தெரிவித்தது.

## அனுதாபமும் ஆறுதலும் கூறுகிறேம்!

**1983** யூலையில் கட்டவிழ்த்து விடப்பட்ட இனவாத வன் செயல்களால் வீடுகளில், வீதிகளில், வேலைத் தலங்களில், போக்குவரத்தில், சிறைக் கூடத்தில் கொடூரமாகவும், கோழைத்தனமாகவும் கொல்லப்பட்ட தமிழ் மக்களுக்கு அச்சம்பவங்களின் இரண்டாவது ஆண்டு நினைவு நாட்களில் செம்பதாகை தனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது. அத்துடன் யூலைச் சம்பவங்களால் உயிர்களையும் உடமைகளையும் இழந்து நிர்க்கதியாகி நிற்கும் தமிழ் மக்களுக்கு தனது ஆறுதல் வார்த்தைகளைச் செம்பதாகை தெரிவித்துக் கொள்கின்றது.

## பாடசாலைகளை......

1ம் பக்கத் தொடர்

பாக்கிச் சம்பளங்களும் வழங்கவேண்டும்.

தமிழ் சிங்கள மக்கள் நல்லுறவுடனும், சமாதானமாகவும் வாழ்வதற்கான சூழ்நிலையை உருவாக்க சகல ஆசிரியர்களும் முன்முயற்சி செய்யவேண்டும். இதற்கு கல்வி முறையின் மூலமாகப் பெரும் சேவை ஆற்றமுடியும். அதனல் கீழ் கூறப்படும் கோரிக்கைகளை முன்னெடுப்பதற்கான இயக்கத்தை நடத்த வேண்டும் என அம் மாநாடு முடிவு செய்தது.
1. சகல பாடசாலைகளிலும் உள்ள எல்லாமாணவர்களும் முதலாம் வகுப்பில் இருந்து சிங்களம் தமிழ் மொழிகள் கற்பிக்கப்படல் வேண்டும்
2. அதேவேளை இனவாத உணர்வுகளை வளர்க்கவும் தூண்டவும் கூடிய பாடங்களைப் பாடசாலைப் பாடப் புத்தங்களில் இருந்து அகற்ற வேண்டும்.

மேலும் சில முன்னணிப் பாடசாலைகளை ராணுவ நட...

இம் மாநாடு கண்டித்துள்ளது. இத்தகைய நடவடிக்கை அடக்கப்படும் வெகுஜனங்களில் மத்தியில்உள்ள இளைஞர்களை அடக்கப்படும் தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தில் பயன் படுத்தும் அரசின் திட்டமானது அடக்கப்படும் மக்கள் மத்தியில் உள்ள மாணவர்களை பிரித்து ஒருவரோடு ஒருவர் மோதவிடும் செயலாகும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறன தீர்மானங்களை எடுத்துள்ள இவ் இலங்கை ஆசிரியர் சங்கம் முற்போக்கு புரட்சிகர சக்திகளைக் கொண்ட ஒரு பலமான யூ. என், பி. விரோத ஸ்தாபனம் என்பது குறிப்பிடத்தக்கதாகும். தேசிய பாதுகாப்பு நிதிக்கு ஆசிரியர்கள் நிதி கொடுக்கக்கூடாது எனத் தீர்மானம் செய்ததும் அதற்காக அரசின் பல அடக்கு முறைக்கு இச்சங்கத்தலைவர்கள் ஆளானதும் தெரிந்ததே. தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளையும், கோரிக்கைகளையும் வற்புறுத்திவரும் இவ் ஆசிரியர் சங்கத்தின் ஏகப் பெரும்பான்மையினர் சிங்கள ஆசிரியர்கள் என்பது கவனிக்...

## யுத்த நிறுத்த......

1ம் பக்கத் தொடர்

இவற்ருல் மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு அகலுதல் போன்றன இடம்பெற்றுள்ளன. இளிநொச்சியில் வைத்து இளைஞர்கள் சிலர் கைதுசெய்யப்பட்டிவுக்கிருர்கள். சூடாநாட்டிற்குள் பொலிகண்டியில், காரைநகரில் ரோந்து தேடுதல் நடைபெற்றுள்ளன. காரைநகரில் ஒன்றுமறியாத மூவர் பஸ்சிற்காக நின்றபோது சுட்டுக் கொல்லப்பட்டனர். நால்வர் பலத்த காயம் அடைந்தனர். இவை யாவும் யுத்த மீறல் சம்பவங்களேயாகும். ஊரடங்குச் சட்டமும், ஏனைய போக்குவரத்துக் கட்டுப்பாடுகளும் எடுக்கப்பட்டதை நம்பி மக்கள் தமது அன்ருட அலுவல்களைப் அச்சமின்றிச் செய்ய முனையும் போது திடீர் ரோந்து, சோதனை, தாக்குதல் என்ருல் யுத்த நிறுத்தம் கபடத்தனமான ஒன்ரு என்றே கேட்கவேண்டியுள்ளது. இவ்வாறு அரசு தரப்பில் இருந்து யுத்தமீறல் இடம் பெறும் போது மறு பக்கத்தில் இருந்தும் சம்பவங்கள் நிகழவே செய்யும் அப்...

இன்னல்களையே சந்திப்பர். ஓரளவு ஆறுதல் கிடைத்தது சில வாரங்களுக்கு மட்டுமேயாகும். அதில்கூட நிம்மதி இல்லை என்ருல் யுத்த நிறுத்தம் என்பதால் என்ன பிரயோசனம் என்பதே மக்களின் கேள்வியாகும். ★

## ஊர்காவல்......

5ம் பக்கத் தொடர்

யால் தன்னையே சுட்டுத் தற்கொலையுண்ட சம்பவம் ஒன்றும் இடம்பெற்றிருக்கிறது.

இவை மட்டுமல்ல வீதிச் சோதனை என்ற பெயரில் நீண்டதூரப் பயணிகள் இவ் ஊர்காவல் படையின் கைவரிசைகளுக்கு ஆளாகி வருகின்றனர். குறிப்பாகத் தமிழ்ப் பயணிகள் இவர்களிடம் அகப்பட்டு படும் வேதனைகள் அதிகம். பொருட்கள் அபகரிப்பு, தாக்குதல், தூஷணவார்த்தைகளால் ஏசுதல், விசாரணைக்கென சிலரை அழைத்துச்சென்று துன்புறுத்தல் ... படை ஈடுபடுவதாக பயணம் செய்யும் மக்கள் கூறுகிருர்கள்.

சில இடங்களில் எதிர்க் கட்சியினர் இப்படையினரால் பயமூறுத்தப்பட்ட சந்தர்ப்பங்களும் எற்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது. எனவே அரசு தனது சொந்தத் தேவைக்காக உருவாக்கப்பட்ட ஊர்காவல் படையை ஏதோ பயங்கரவாதிகளுக்கு எதிரான ஒன்று என்று காட்ட மூயலுகின்றது ஆனல் ஊர்காவல் படை நாளடைவில் அரசின் வேறு ஒரு ரகப் படையாக மாற்றம் பெற்று விடும் போல் தெரிகின்றது. எதிர்காலத்தில் இந்த அரசின் சர்வாதிகாரத்திற்கு இவ் ஊர்காவல் படையும் ஒரு கருவியாக்கப்படக் கூடும் என்ற அச்சம் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. ஆதலினலேயே ஊர்காவல்படை முறை அகற்றப்படவேண்டும் என மக்கள் கோரிக்கை மூன்வைக்க முன்வந்துள்ளனர். அது நியாயமான ஒன்றே.

வாறு வேலை இழந்த பல்லாயிரம் தொழிலாளர்கள்— ஊழியர்கள் பல மாதங்கள், வருடங்களாக வேலை இன்றி வீதியில் விடப்பட்டனர்.

கப்பட்டவர்களுக்கு மீண்டும் வேலை வழங்க யூ. என். பி திர்ப்பந்திக்கப்பட்டது. ஆனால் இப்பொழுது ஐந்து ஆண்டுகளின் பின்பு வேலை

எந்த அடிப்படையில் பழி வாங்கி வருவதை எவருமே அனுமதிக்க முடியாது. இதனால் யூ. என். பி ஆட்சியின் கேவலம் தொழிலாளி வர்க்

கோரிக்கைகளையும் அரசுக்கு எதிரான கண்டனத்தையும் தெரிவித்தது.

களுக்கு தனது ஆறுதல் வார்த்தைகளைச் செம்பதாகை தெரிவித்துக் கொள்கின்றது.

## பாடசாலைகளை......

1ம் பக்கத் தொடர்

பாக்கிச் சம்பளங்களும் வழங்கவேண்டும்.

தமிழ் சிங்கள மக்கள் நல்லுறவுடனும், சமாதானமாகவும் வாழ்வதற்கான சூழ்நிலையை உருவாக்க சகல ஆசிரியர்களும் முன்முயற்சி செய்யவேண்டும். இதற்கு கல்வி முறையின் மூலமாகப் பெரும் சேவை ஆற்றமுடியும். அதனால் கீழ் கூறப்படும் கோரிக்கைகளை முன்னெடுப்பதற்கான இயக்கத்தை நடத்த வேண்டும் என அம் மாநாடு முடிவு செய்தது.
1. சகல பாடசாலைகளிலும் உள்ள எல்லாமாணவர்களும் முதலாம் வகுப்பில் இருந்து சிங்களம் தமிழ் மொழிகள் கற்பிக்கப்படல் வேண்டும்
2. அதேவேளை இனவாத உணர்வுகளை வளர்க்கவும் தூண்டவும் கூடிய பாடங்களைப் பாடசாலைப் பாடப் புத்தங்களில் இருந்து அகற்ற வேண்டும்.

மேலும் சில முன்னணிப் பாடசாலைகளை ராணுவ நடவடிக்கைகளுக்கு கையளிக்கவுள்ள கல்வி அமைச்சின் தயாரிப்புகளை வன்மையாக இம் மாநாடு கண்டித்துள்ளது. இத்தகைய நடவடிக்கை அடக்கப்படும் வெகுஜனங்களில் மத்தியில்உள்ள இளைஞர்களை அடக்கப்படும் தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தில் பயன்படுத்தும் அரசின் திட்டமானது அடக்கப்படும் மக்கள் மத்தியில் உள்ள மாணவர்களை பிரித்து ஒருவரோடு ஒருவர் மோதவிடும் செயலாகும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறான தீர்மானங்களை எடுத்துள்ள இவ் இலங்கை ஆசிரியர் சங்கம் முற்போக்கு புரட்சிகர சக்திகளைக் கொண்ட ஒரு பலமான யூ. என், பி. விரோத ஸ்தாபனம் என்பது குறிப்பிடத்தக்கதாகும். தேசிய பாதுகாப்பு நிதிக்கு ஆசிரியர்கள் நிதி கொடுக்கக்கூடாது எனத் தீர்மானம் செய்ததும் அதற்காக அரசின் பல அடக்கு முறைக்கு இச்சங்கத்தலைவர்கள் ஆளானதும் தெரிந்ததே. தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளையும், கோரிக்கைகளையும் வற்புறுத்திவரும் இவ் ஆசிரியர் சங்கத்தின் ஏகப் பெரும்பான்மையினர் சிங்கள ஆசிரியர்கள் என்பது கவனிக்கப்படல் வேண்டும்.

## யுத்த நிறுத்த......

1ம் பக்கத் தொடர்

இவற்றால் மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு அகலுதல் போன்றன இடம்பெற்றுள்ளன. கிளிநொச்சியில் வைத்து இளைஞர்கள் சிலர் கைதுசெய்யப்பட்டிவுக்கிறார்கள். சூடா நாட்டிற்குள் பொலிகண்டியில், காரைநகரில் ரோந்து தேடுதல் நடைபெற்றுள்ளன. காரைநகரில் ஒன்றுமறியாத மூவர் பஸ்சிற்காக நின்ற போது சுட்டுக் கொல்லப்பட்டனர். நால்வர் பலத்த காயம் அடைந்தனர். இவை யாவும் யுத்த மீறல் சம்பவங்களேயாகும். ஊரடங்குச் சட்டமும், ஏனைய போக்குவரத்துக் கட்டுப்பாடுகளும் எடுக்கப்பட்டதை நம்பி மக்கள் தமது அன்றாட அலுவல்களைப் அச்சமின்றிச் செய்ய முனையும் போது திடீர் ரோந்து, சோதனை, தாக்குதல் என்றால் யுத்த நிறுத்தம் கபடத்தனமான ஒன்றா என்றே கேட்கவேண்டியுள்ளது. இவ்வாறு அரசு தரப்பில் இருந்து யுத்தமீறல் இடம் பெறும் போது மறு பக்கத்தில் இருந்தும் சம்பவங்கள் நிகழவே செய்யும் அப்பொழுது பரஸ்பரம் இருபகுதியினரும் நடவடிக்கைகளில் இறங்கினால் மக்கள் பெரும் இன்னல்களையே சந்திப்பர். ஓரளவு ஆறுதல் கிடைத்தது சில வாரங்களுக்கு மட்டுமேயாகும். அதில்கூட நிம்மதி இல்லை என்றால் யுத்த நிறுத்தம் என்பதால் என்ன பிரயோசனம் என்பதே மக்களின் கேள்வியாகும். ★

## ஊர்காவல்......

5ம் பக்கத் தொடர்

யால் தன்னையே சுட்டுத் தற்கொலையுண்ட சம்பவம் ஒன்றும் இடம்பெற்றிருக்கிறது.

இவை மட்டுமல்ல வீதிச் சோதனை என்ற பெயரில் நீண்டதூரப் பயணிகள் இவ் ஊர்காவல் படையின் கைவரிசைகளுக்கு ஆளாகி வருகின்றனர். குறிப்பாகத் தமிழ்ப் பயணிகள் இவர்களிடம் அகப்பட்டு படும் வேதனைகள் அதிகம். பொருட்கள் அபகரிப்பு, தாக்குதல், தூஷணவார்த்தைகளால் ஏசுதல், விசாரணைக்கென சிலரை அழைத்துச்சென்று துன்புறுத்தல் போன்ற தான்தோன்றித்தன வேலைகளில் இவ் ஊர்காவல் படை ஈடுபடுவதாக பயணம் செய்யும் மக்கள் கூறுகிறார்கள்.

சில இடங்களில் எதிர்க்கட்சியினர் இப்படையினரால் பயமுறுத்தப்பட்ட சந்தர்ப்பங்களும் எற்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது. எனவே அரசு தனது சொந்தத் தேவைக்காக உருவாக்கப்பட்ட ஊர்காவல் படையை ஏதோ பயங்கரவாதிகளுக்கு எதிரான ஒன்று என்று காட்ட முயலுகின்றது ஆனால் ஊர்காவல் படை நாளடைவில் அரசின் வேறு ஒரு ரகப் படையாக மாற்றம் பெற்று விடும் போல் தெரிகின்றது. எதிர்காலத்தில் இந்த அரசின் சர்வாதிகாரத்திற்கு இவ் ஊர்காவல் படையும் ஒரு கருவியாக்கப்படக் கூடும் என்ற அச்சம் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. ஆதலினாலேயே ஊர்காவல்படை முறை அகற்றப்படவேண்டும் என மக்கள் கோரிக்கை முன் வைக்க முன்வந்துள்ளனர். அது நியாயமான ஒன்றே.

★

## விஷேச சந்தா வழங்குங்கள்!

செம்பதாகை பத்திரிகைக்கு மக்கள் மத்தியில் விஷேச சந்தா சேர்க்கும் இயக்கம் வெற்றிகரமாக முன்னேறிக் கொண்டு செல்கின்றது. மேலும் இவ்வியக்கம் வெற்றிபெற செம்பதாகை வாசகர்கள், ஆதரவாளர்கள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என வேண்டுகின்றோம். இவ் விஷேச சந்தா செலுத்திய அனைவருக்கும் இம் மாதப் பத்திரிகை அனுப்பி வைக்கப்படும். தன்றி.

நிர்வாகக் குழு
**செம்பதாகை**

## 2ம்கட்டப் பேச்..

1ம் பக்கத் தொடர்

அரசு தரப்பில் இருந்து முன்வைக்கப்படும் புதிய ஆலோசனைகள் பழையவற்றையே புதிய பெயர்களின் முன்வைப்பதாக இருக்கக் கூடாது. தமிழ் மக்களின் அடிப்படையான உரிமைகளைத் தொட்டு நிற்கக் கூடியதும், அவர்களின் தேசிய இனத் தனித்துவம் பாதுகாக்கப்படக் கூடியவாறும் அமைந்த, சுயாட்சிக்கான அதிகாரங்கள் வழங்கக்கூடிய ஆலோசனைகளே தேவையானதாகும்.

அதேவேளை ஏனைய தமிழ் பேசும் சிறுபான்மையினரான முஸ்லீம் மக்கள், இந்திய வம்சாவழித் தமிழ் மக்கள் ஆகியோரின் அபிலாஷைகளும், உரிமைகளும் கிடைக்கக்கூடிய விதத்தில் ஆலோசனைகள் முன்வைக்கப்படல் வேண்டும் அவர்களுக்கான உத்தரவாதம் ஏற்படுத்தப்படும் எந்தத் தீர்விலும் பிரிக்கமுடியாத அம்சமாக இருக்கவேண்டும். இதைத் தமிழர் சார்பான பிரதிநிதிகள் பரந்த மனப்பான்மையுடனும், தீர்க்கதரிசனத்துடனும் கவனத்தில் கொள்ளவேண்டும். ஏனெனில் தமிழ்பேசும் மக்களிடையே பிளவுகளையும் பூசல்களையும் வளர்ப்பதற்கு சந்தர்ப்பம் பார்த்திருக்கும் தீய சக்திகளின் எண்ணங்களை முன்யோசனையுடன் முறியடிப்பது அவசியம். அதேபோல் இலங்கைத் தமிழர்கள் மத்தியில் மிகவும் நொந்த நிலையில், எதிர்காலத்தில் மேலும் நசுக்கப்படுவோமா என்ற அச்சத்துடனும் சந்தேகத்துடனும் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் என்ற நிலையில் வாழ்ந்து வரும் மக்களின் அபிலாஷைகளுக்கும் பேச்சு வார்த்தையின் போது தமிழர்கள் பிரதிநிதிகள் தமது கவனத்தைத் திருப்பியே ஆகவேண்டும். இவ்வாறு சிறுபான்மையினரின் பிரச்சினைகளில் அரசின் உத்தரவாதம் மட்டுமன்றி தமிழர் பிரதிநிதிகளின் தீர்க்க தரிசனமான ஆலோசனைகளும் அவசியம். அதுவே எதிர்காலத்தில் தமிழ் பேசும் மக்கள் அனைவரினதும் ஐக்கியத்திற்கு தேவையானதாகும்.

அரசாங்கம் கபடத்தனம் இன்றி நிர்ப்பந்த அடிப்படையில் தானும் குறைந்தபட்ச அதிகாரங்களைக் கொண்ட சுயாட்சிக்கான ஆலோசனைகளை முன்வைக்கத் தயாராக இருக்குமானால் தமிழர் பிரதிநிதிகளும் சாத்தியமான விட்டுக்கொடுப்பை செய்ய முன்வரல்வேண்டும். அதை இடைக்காலத் தீர்வு என்ற அடிப்படையில் ஏற்றுக்கொள்வது தமிழ் பேசும் மக்களின் எதிர்காலத்திற்கு உதவக் கூடிய தொன்றேயாகும்.

★

## சிறைகளில்...

1ம் பக்கத் தொடர்

எனவே சிறைகளில் உள்ள தமிழ் இளைஞர்களை விடுதலை செய்ய வேண்டும் அல்லது விசாரணைக்காக நீதிமன்றத்தின் முன் நிறுத்தவேண்டும். இரண்டும் இன்றி அவர்களைப் பணயக் கைதிகளாக வைத்து சித்திரவதைகள் செய்வதால் ஆட்சியினர் எவ்வித பயனையும் பெறப்போவதில்லை. சிறையில் உள்ள தமிழ் இளைஞர்களின் உடல், உள நிலைமைகள் பாதிப்பு அடையவும், அவர்களது பெற்றோர் மீளாத வேதனை கொள்ளவும் கூடிய நிலையை உடன் நிறுத்த இளைஞர்கள் விடுதலை செய்யப்படவேண்டும். ★

அச்சுப்பதிவு: யாழ்ப்பாண அச்சகம் 407, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். வெளியீடு : சி. நவரத்தினம் 15/1 மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.